பக்கங்கள் 23+3

மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2057 | சித்திரை 12 வெள்ளிக்கிழமை 25.04.2025 | அதிர்வு 265

### பஸ் விபத்தில்
## பாடசாலை மாணவர்கள் உட்பட 28 பேர் படுகாயம்

(எஸ்.ஜினோதன்)

பதுளை , மஹியங்கனை, திஸ்ஸபுர பிரதேசத்தில் இடம்பெற்ற பஸ் விபத்தில் பாடசாலை மாணவர்கள் உட்பட

02▶

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



# ஜே.வி.பியினரே உண்மையான இனவாதிகள்!

### கஜேந்திரகுமார் எம்.பி. விளாசல்

(எஸ்.நிதர்ஷன்)

“இனவாதம் இல்லை, இனவாதம் இல்லை என உதட்டளவில் மேடைகளில் கூறிக் கொண்டாலும் இனவாதத்தை ஜே.வி.பியினரே வெளிப்படுத்துகின்றனர் அவர்களே உண்மையான இனவாதிகள்.”

- இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

யாழ். கொக்குவிலில் உள்ள கட்சியின் தலைமை அலுவலகத்தில் இன்று வெள்ளிக்கிழமை நடத்திய ஊடக சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்..

03▶

# சுமந்திரனிடம் பகிரங்க மன்னிப்பு நீதிமன்றத்தில் கோரினார் அகிலன்

### திருகோணமலை மாவட்ட மன்றில் பிணக்குத் தீர்க்கப்பட்டது





‘புதிய சுதந்திரன்’ என்ற இலத்திரனியல் நாளிதழை வெளியிடும் அகிலன் முத்துக்குமாரசாமி அந்த நாளிதழில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரனுக்கு எதிராக, வழக்கு ஒன்றை ஒட்டி அவருக்கு முறையற்ற அழுத்தத்தை ஏற்படுத்தும் விதத்தில் வெளியிட்ட செய்தி தொடர்பாகத் தொடுக்கப்பட்ட நீதிமன்ற அவமதிப்பு வழக்கில்

02▶



# மாரடைப்புக் காரணமாக பொலிஸார் இருவர் சாவு!

(எஸ்.ஜினோதன்)

கண்டி, ஸ்ரீதலதா வழிபாட்டு வீதியில் கடமையில் ஈடுபட்டிருந்த இரண்டு பொலிஸ் அதிகாரிகள் மாரடைப்புக் காரணமாக உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸ் ஊடக பிரிவு தெரிவித்துள்ளது .

ஸ்ரீ தலதா மாளிகையில் புனித பல் நினைவுச் சின்னத்தின் சிறப்பு கண்காட்சியான ஸ்ரீ தலதா வழிபாடு, தொடர்ச்சியாக எட்டாவது நாளாக இன்றும் நடைபெற்று வருகின்றது.

16 ஆண்டுகளுக்குப் பின்னர் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு ஏராளமான மக்கள் வருகை தந்துள்ள நிலையில், கூட்டத்தைக் கட்டுப்படுத்தக் கடமையிலிருந்த இரண்டு பொலிஸ் அதிகாரிகள் இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### சுமந்திரனிடம்...

இன்று நீதிமன்றத்திடமும் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரனிடமும் மன்றில் பகிரங்க மன்னிப்புக் கோரினார்.

திருகோணமலை மாவட்ட நீதிமன்றத்தில் இந்த வழக்கு இன்று முற்பகல் எடுத்துக் கொள்ளப்பட்டபோதே இவ்வாறு அவர் பகிரங்க மன்னிப்புக் கோரினார்.

இப்படிப் பகிரங்க மன்னிப்புக் கோருகின்றமை குறித்து அவரது பத்திரிகையில் ஒரு வார காலத்துக்குள் பகிரங்கமாக அறிவிக்கும்படியும் அவருக்கு நீதிமன்றம் இன்று உத்தரவிட்டது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தேசிய மாநாடு தொடர்பான சர்ச்சை திருகோணமலை மாவட்ட நீதிமன்றத்தில் விசாரணையில் இருந்த சமயம், அதையொட்டி அந்த வழக்கின் எதிராளிகளில் ஒருவரான ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் மீது முறையற்ற அழுத்தத்தை ஏற்படுத்தும் விதத்தில் அகிலன் முத்துக்குமாரசாமி செய்தி ஒன்றை தமது 'புதிய சுதந்திரன்' இதழில் வெளியிட்டார் என்றும், அது நீதிமன்ற அவமதிப்பு நடவடிக்கை என்றும் திருகோணமலை மாவட்ட நீதிமன்றத்தில் இந்த வழக்கின் எதிராளிகளில் ஒருவரான சுமந்திரன் முறையிட்டு இருந்தார்.

இந்த முறைப்பாட்டை பரிசீலித்த திருகோணமலை மாவட்ட நீதிமன்றம் அகிலன் முத்துக்குமாரசுவாமிக்கு எதிரான விடயத்தை தனியாக விசாரிக்க உத்தரவிட்டமையுடன் அதனை ஒட்டி கைது செய்யப்பட்ட அகிலன் முத்துக்குமார சுவாமியை பிணையிலும் விடுவித்து இருந்தது.

இந்த வழக்கின் விசாரணை இன்று நடைபெறும் என முன்னரே அறிவிக்கப்பட்டிருந்தது. அதன்படி வழக்கு இன்று திருகோணமலை மாவட்ட நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

அப்போது அகிலன் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி, இனிமேல் இந்த வழக்கில் அகிலன் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி என்.சிறிகாந்தா முன்னிலையாகி வாதாடுவார் என்றும், அதற்கு இடம் அளிக்கும் விதத்தில் வழக்கை பிறிதொரு திகதிக்கு ஒத்திவைக்கும் படியும் கோரினார்.

அதற்கு ஒப்புக்கொண்ட முறைபாட்டாளர் சுமந்திரன், அதே சமயம் இன்னொரு விடயத்தை நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டு வந்தார்.

இந்த வழக்கில் குற்றம் சுமத்தப்பட்டுள்ள அகிலன் முத்துக்குமாரசாமி, நீதிமன்றுக்கு தெரிவிக்காமலேயே வெளிநாட்டுக்குச் சென்று வருகின்றார். இனிமேல் இப்படி இந்த வழக்கு விசாரணை முடிவடைய முன்னர் அவர் வெளிநாடு செல்வதாயின் அதற்கு முன்பு நீதிமன்றத்திடம் அனுமதி பெற வேண்டும் என்ற உத்தரவை விடுக்குமாறு சுமந்திரன் மன்றைக் கோரினார்.

அதை நீதிமன்றம் ஏற்றுக்கொண்டது. அகிலன் முத்துக்குமாரசாமிக்கு எதிராகச் சுமத்தப்பட்டுள்ள நீதிமன்ற அவமதிப்புக் குற்றச்சாட்டு பாரதூரமானது. அது கருதி இந்த வழக்கு விசாரணைக்கு முன்னர் எதிராளி நாட்டை விட்டு வெளியே செல்வதாயின் அது குறித்து நீதிமன்றறுக்கு விண்ணப்பித்து, முன்அனுமதி பெற வேண்டும். அத்தகைய அனுமதி பெறுவதற்கான கோரிக்கை தொடர்பில் முறைப்பாட்டாளருக்கும் நேரத்துடன் தகவல் தர வேண்டும் என்ற உத்தரவைக் கூறி அதை பதியும்படி நீதிபதி உத்தரவிட்டார்.

அந்தச் சமயத்தில் இந்த வழக்கில் எதிராளியான அகிலன் முத்துக்குமாரசாமி பகிரங்க மன்னிப்புக் கோரினால் இந்த விடயத்தை அத்தோடு சுமுகமாக முடிவுறுத்த வாய்ப்பு உண்டா என்று நீதிபதி கேட்டார். அதற்குச் சுமந்திரன் பதிலளித்தார்.

"ஆம். அப்படிச் செய்ய முடியும். அப்படி செய்வதற்கான வாய்ப்பு உண்டா என்று கேட்டு, எதிராளியான அகிலன் முத்துக்குமாரசாமி என்னைத் தேடி வந்து சந்தித்தார். நான் அவர் அப்படி பகிரங்க மன்னிப்புக் கேட்டால், அதனடிப்படையில் வழக்கை முடிவுறுத்த நீதிமன்றத்திடம் என் தரப்பில் இருந்து நேரடியாக விண்ணப்பிப்பேன் என்று உறுதிமொழி கொடுத்திருந்தேன். ஆயினும் அவர் அந்த விடயத்தை இங்கு முன்நகர்த்தவில்லை என்று தோன்றுகின்றது." – என்று சுமந்திரன் குறிப்பிட்டார்.

இதனை அடுத்து இந்த விடயத்தை எதிராளியான அகிலன் முத்துக்குமார–சாமி சட்டத்தரணிகளுடன் ஆலோசித்து வருமாறு தெரிவித்து வழக்கை சற்று நேரத்துக்கு ஒத்திவைத்தார் நீதிபதி.

இதனை அடுத்து வழக்கு சற்று நேரத்தில் மீண்டும் அழைக்கப்பட்டது. அப்போது அகிலன் முத்துக்குமாரசாமி சார்பில் முன்னிலையான சட்டத்தரணி சமர்ப்பணங்களை முன்வைத்தார்.

"எனது கட்சிக்காரர் இந்த நீதிமன்றத்தில் முறைப்பாட்டாளர் சுமந்திரனிடம் பகிரங்க மன்னிப்புக் கோரி இந்த விடயத்தை முடிவுறுத்த விரும்புகின்றார். அவர் நீண்ட காலம் பத்திரிகையாளர். இதற்கு முன்னர் இதுபோன்ற தவறுகள் எதையும் செய்யாதவர். அவற்றைக் கவனத்தில்கொண்டு இந்த விடயத்தை இத்தோடு முடிவுறுத்த நீதிமன்றம் அனுமதிக்க வேண்டும்." – என்று தெரிவித்தார்.

"எதிராளி தமது தவறுக்கு நீதிமன்றில் பகிரங்க மன்னிப்புக் கோருவதால் இந்த விடயத்தை இத்துடன் முடிவுறுத்தவும், நீதிமன்ற அவமதிப்பு விவகாரம் தொடர்பில் அவர் மீது தொடர் நடவடிக்கை எடுக்காமல் கைவிடும் படியும் நீதிமன்றுக்குப் பணிவான விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கின்றேன்" – என்றார் சுமந்திரன்.

இருதரப்பு சமர்ப்பணங்களையும் செவிமடுத்த நீதிபதி, "இந்த விடயத்தை இத்தோடு முடிவுறுத்த நீதிமன்றம் அனுமதிக்கின்றது. ஆயினும், இத்தகைய மன்னிப்பு கோரப்பட்டமை பற்றிய செய்தியை எதிராளி தமது பத்திரிகையில் ஒரு வாரத்துக்குள் வெளியிட வேண்டும்." – என்ற கட்டளையை பிறப்பித்து விவகாரத்தை சுமுகமாக தீர்த்து வைக்க அனுமதி அளித்தார் நீதிபதி.

### பாடசாலை...

28 பேர் படுகாயமடைந்துள்ளனர் என்று மஹியங்கனை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து இன்று வெள்ளிக்கிழமை காலை இடம்பெற்றுள்ளது.

பஸ்ஸில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறு காரணமாக இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தின்போது 10 பாடசாலை மாணவர்கள் உட்பட 28 பேர் படுகாயமடைந்துள்ளனர். அவர்கள் சிகிச்சைக்காக மஹியங்கனை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மஹியங்கனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# தெவிநுவர இரட்டைக் கொலை: மற்றுமொரு சந்தேகநபர் கைது

மாத்தறை – தெவிநுவர பகுதியில் விஷ்ணு ஆலயத்துக்கு அருகில் உள்ள சிங்காசன வீதியில் இரண்டு நபர்களைச் சுட்டுக் கொலை செய்த சம்பவத்துடன் தொடர்புடைய மற்றுமொரு சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கந்தர, தலல்ல தெற்கு பகதியில் வசிக்கும் 33 வயது நபரே நேற்று வியாழக்கிழமை மாலை கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் இரட்டைக் கொலை சம்பவத்தில் ஈடு பட்ட துப்பாக்கிதாரிகளுக்கு உடந்தையாக இருந்தார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சி

**ஜே.வி.பியினரே...**

“இலங்கையின்தெற்கில்மட்டுமல்லாது வடக்கு, கிழக்கிலும் தாங்கள்தான் பெரிய கட்சி என்றும், தமக்கே தமிழ் மக்கள் ஆணை வழங்கியுள்ளனர் என்றும் ஜே.வி.பியினர் தம்பட்டம் அடித்து வருகின்றனர்.

உண்மையில் வடக்கு, கிழக்கிலுள்ள 19 நாடாளுமன்ற உறுப்பினர்களில் 8 பேரே ஜே.வி.பியினர். ஏனையவர்களில் தமிழரசுக் கட்சி 8, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி 1, ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி 1, சுயேச்சைக் குழு 1 என்றவாறாகவே ஆசனங்கள் உள்ளன.

இவ்வாறிருக்கையில் எதனடிப்படையில் தாம்தான் பெரிய கட்சி என்றும், தமக்கே மக்கள் ஆணை வழங்கி உள்ளனர் என்றும் ஜே.வி.பியினர் கூறுகின்றனர் என்ற கேள்வி எழுகின்றது.

இதனை உள்ளூரிலும் சர்வதேச மட்டத்திலும் கூடத் தெரிவித்து வருகின்றனர். எனவே, இந்தப் பொய்ப் பிரசாரத்தையும் ஜே.வி.பியின் ஏமாற்றுத்தனங்களையும் அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும்.

மேலும், தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் தமிழ்த் தேசிய நிலைப்பாட்டோடு அவர்கள் இப்போது இல்லை எனவும் கூறி வருகின்றனர். அவர்களுக்குச் சமஷ்டியோ, சுயாட்சியோ அவசியமில்லை என்றும், அவர்களைச் சமத்துவமாகக் கருதினால் இலங்கையர் என்ற அடையாளத்துடன் அவர்கள் வாழ்வார்கள் என்றவாறாகப் பேசி வருகின்றனர்.

அதேபோன்று கடந்த காலங்களில் ஆட்சி செய்த கட்சிகள் ஊழல் நிறைந்த இனவாதத்துடன் செயற்பட்டதாலே தமிழ் மக்களின் மனங்களை வென்றெடுக்க முடியவில்லை. ஆனால், நாம் ஊழல், இனவாதம் இல்லாத ஒரு கட்சியாகவே செயற்பட்டு வருவதால் எமக்கு தமிழ் மக்களும் ஆதரவை வழங்கி வருகின்றனர்.

இப்படி இன, மத பாகுபாடு பார்க்காதவர்கள் என்றால் தமிழ் மக்களின் பிரச்சினைகள், தேவைகள் தொடர்பில் வழங்கிய வாக்குறுதிகளை இன்னமும் ஏன் நிறைவேற்றவில்லை. தாம் வழங்கிய வாககுறுதிகளை தாமே நிறைவேற்றத் தெரியாதவர்களாம்.

உண்மையில் இன, மத வேறுபாடு பார்க்காதவர்கள் என்றால் யார் ஆட்சிக்கு வந்தாலும் நிதியைக் கொடுப்பதில் என்ன பிரச்சினை இருக்கின்றது? அரசு என்றவுடன் மக்களை அச்சுறுத்தி மிரட்டல் விடுவதா இவர்களது அரசியல் மாற்றம் எனக் கேட்கின்றோம்.

என்.பி.பி. என்று சொல்லுகின்ற ஜே.வி.பியின் கதைகள், பேச்சுக்கள், செயற்பாடுகள் எல்லாமே ஏமாற்று வித்தைகள்தான்.

தாங்கள் இனவாதம் இல்லை என்றும், இனவாதம் பேசுவதற்கு இடமில்லை எனவும் கூறுகின்ற இந்த ஜே.வி.பியினர்தான் முற்றுமுழுதான இனவாதிகள். இவர்கள் பெயரளவிலே இனவாதமில்லை எனச் சொல்லிக்கொண்டு இருந்தாலும் எல்லாவற்றிலும் இனவாதம் கொண்டவர்கள் இந்த ஜே.வி.பியினர்தான்.

சின்னச்சின்ன விடயங்களுக்குக் கூட தமிழ்த் தேசியம் பேசும் கட்சிகள் தான் இனவாதத்தைத் தூண்டுவதாகச் சொல்லும் இவர்கள் தமிழ் மக்களது பல்வேறு பிரச்சினைகளுக்கு ஏன் தீர்வை வழங்க முடியாமல் இருக்கின்றனர்.

ஒரு பக்கம் நீங்கள்தான் பெரிய கட்சி என்றால் தையிட்டி விகாரை போன்ற இனவாதமில்லாத சின்னச் சின்ன பிரச்சினைகளுக்கு இனவாதம் இல்லாமல் தீர்வை வழங்கலாமே. ஏன் இவர்களால் முடியவில்லை. ஆகவே, உங்களிடம் இனவாதம் இல்லை என்றால் முதலில் தையிட்டி விவகாரம் உள்ளிட்ட பிரச்சினைகளுக்குத் தீர்வைக் கொடுக்க நீங்கள் தயாரா எனச் சவால் விடுக்கின்றோம்.

ஆக மொத்தத்தில் தமிழ் மக்களின் ஒவ்வொரு பிரச்சினைகளையும் தீர்க்க முடியவில்லை என்பதால் இந்தப் பிரச்சினைகளைத் தட்டிக் கழித்து இனவாதம் என்று பெயரைச் சூட்டிக்கொண்டு தட்டிக் கழித்துவிட்டு கடந்து செல்லப் பார்க்கின்றனர்.

உண்மையில் இனவாதம் என்றால் சட்டவிரோத நடவடிக்கைக்கு நடவடிக்கை எடுக்காமல் அதனை முடக்குவதுதான் இனவாதம். இவ்வாறாக தமிழ் மக்களின் ஒவ்வொரு விடயத்துக்கும் குறிப்பாக தாமே வழங்கிய வாக்குறுதிகள் உட்பட அனைத்தையும் தட்டிக்கழித்து கடந்து செல்லவே முயற்சிக்கின்றனர்.

இனவாதம் இல்லை, இனவாதம் இல்லை என உதட்டளவில் மேடைகளில் கூறிக் கொண்டாலும் இனவாதத்தை ஜே.வி.பியினரே வெளிப்படுத்துகின்றனர் அவர்களே உண்மையான இனவாதிகள்.

இத்தகைய பௌத்த சிங்கள பேரினவாதிகளுக்கு இந்தத் தேர்தலில் சந்தர்ப்பத்தை வழங்கினால் அது தமிழ் மக்களுக்கே பாரிய ஆபத்தை ஏற்படுத்தும். எனவே,தமிழ் மக்கள் விழிப்புடன் இருந்து

தமிழ்த் தேசியத்தை நேசிக்கின்ற எங்களுக்கு அதற்கான சந்தர்ப்பத்தை வழங்க வேண்டும்.

குறிப்பாக முன்னாள் ஜனாதிபதி கொடூரமானவர், இனவாதி என்பதெல்லாம் தமிழ் மக்களுக்குத் தெரிந்திருந்தாலும் அவரைப் பற்றி அறிந்து கொள்வதற்கு சிங்கள மக்களுக்கு இரண்டு வருடங்கள் எடுத்திருந்தன.

ஆனால், பல்வேறு கதைகளைக் கூறி ஆட்சிக்கு வந்த இன்றைய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தான் வழங்கிய வாக்குறுதிகளையே நிறைவேற்ற முடியாதவராக தன்னுடையதும் தமது கட்சியினதும் உண்மை முகத்தை வெளிப்படுத்தி வருகின்றார். ஆக அநுரவைப் பற்றி மக்கள் அறிந்துகொள்ள ஆறு மாதங்கள் எடுத்துள்ளது.

எனவே, உண்மையான முகத்தை இப்பவேனும் அறிந்துகொண்டுள்ள நீங்கள் ஒவ்வொருவரும் நிதானமாகச் சிந்தித்து எதிர்காலத்தில் உங்களுக்கு ஆபத்து ஏற்படாத வகையில் தீர்க்கமான முடிவை எடுக்க வேண்டும் எனக் கோருகின்றேன்.” – என்றார்.



# பாப்பரசரின் மறைவுக்கு சஜித் இரங்கல்!





எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இன்று வெள்ளிக்கிழமை காலை வத்திக்கான் தூதரகத்துக்குச் சென்று மறைந்த பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸுக்கு இரங்கல் தெரிவித்தார்.

இலங்கையில் உள்ள வத்திக்கான் தூதரகத்துக்கு வருகை தந்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, இலங்கையின் வத்திக்கான் அப்போஸ்தலிக்க தூதுவர் பேராயர் பிரயன் உடெய்க்வேவைச் சந்தித்து சிறிது நேரம் உரையாடியதைத் தொடர்ந்து தனது இரங்கலைத் தெரிவித்தார்.

பின்னர், அங்கு வைக்கப்பட்டிருந்த இரங்கல் புத்தகத்தில் குறிப்பு எழுதி, பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸின் மறைவு குறித்து உலகெங்கிலும் உள்ள அனைத்து கிறிஸ்தவர்களுக்கும் தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்தார்.



## மித்தெனிய முக்கொலைச் சம்பவம்:

# இந்தியாவில் கைது செய்யப்பட்டு நாடு கடத்தப்பட்ட சந்தேகநபர் கைது

மித்தெனிய முக்கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய மற்றுமொரு சந்தேகநபர் இந்தியாவில் கைது செய்யப்பட்டு நாடு கடத்தப்பட்ட நிலையில், இன்று குற்றப்புலனாய்வுப்பிரிவினரால் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த பெப்ரவரி மாதம் மித்தெனிய பகுதியில் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் கஜ்ஜா எனப்படும் அருண விதான கமகே மற்றும் அவரது இரண்டு பிள்ளைகள் உயிரிழந்தனர்.

மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் துப்பாக்கிச் சூட்டை மேற்கொண்டு விட்டு அங்கிருந்து தப்பிச் சென்றிருந்தனர்.

இந்தச் சம்பவத்தின்போது மோட்டார் சைக்கிளை செலுத்தியதாகத் தெரிவிக்கப்படும் சந்தேகநபரே இவ்வாறு இந்தியாவில் கைது செய்யப்பட்ட நிலையில், நாடு கடத்தப்பட்டிருந்தார்.

## உள்ளூராட்சி சபை
## தேர்தல் களம்



# திருமலை நகராட்சியின் தமிழ்த் தேசியப் பேரவை வேட்பாளர்கள் அறிமுகம்

திருகோணமலை நகர சபைக்கான தேர்தலில் போட்டியிடுகின்ற தமிழ்த் தேசியப் பேரவையின் வேட்பாளர்களை அறிமுகம் செய்துவைக்கும் கூட்டம் நேற்று வியாழக்கிழமை திருகோணமலை நகராட்சி மண்டபத்தில் நடைபெற்றது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் மாவட்ட செயலாளர் கி.ஶ்ரீபிரசாத் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் பொதுச்செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளர் செல்வராசா கஜேந்திரன், தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன், தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் ந.ஶ்ரீகாந்தா, சமூக-அரசியல் செயற்பாட்டாளர் க.அருந்தவபாலன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் சட்டத்தரணி க.சுகாஸ் ஆகியோர் கலந்துகொண்டு உரையாற்றினார்கள்.

இந்தக் கூட்டத்துக்கான ஏற்பாடுகளைத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் மாவட்ட அமைப்பாளரும் நகர சபைக்கான தலைமை வேட்பாளருமான க.குகன் மேற்கொண்டிருந்தார்.

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் சைக்கிள் சின்னத்தில் கடந்த காலங்களில் தேர்தல்களில் போட்டியிட்டு வந்த தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி இப்போது தமிழ்த் தேசியப் பேரவை என்னும் கூட்டணியாக மாற்றம் பெற்றுள்ளது. இந்த அணியில் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம், தமிழ்த் தேசியக் கட்சி, சனநாயகத் தமிழரசுக் கட்சி ஆகியன இணைந்துள்ளன.

திருகோணமலை நகர சபைத் தேர்தலின் பின்னர் மாநகர சபையாகத் தரமுயர்த்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.








# கிளிநொச்சியில் நீதி கோரி உறவுகள் பெரும் போராட்டம்

கிளிநொச்சியில் நீதி கோரி வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் இன்று வெள்ளிக்கிழமை மாபெரும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கிளிநொச்சி மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் இந்தப் போராட்டம் காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகத்துக்கு முன்பாக முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் தெரிவிக்கையில்,

“2 ஆயிரத்து 984 ஆவது நாளாகவும் எமது போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றோம். எமது உறவுகளைத் தேடி அலைந்து திரிகின்றோம். இதுவரையில் ஆட்சியில் இருந்த எந்த அரசும் எமக்கான உரிய தீர்வைப் பெற்றுத்தரவில்லை. சர்வதேசத்திடம் ஒரு முகமும் எம்மிடம் ஒரு முகமுமாக அரசு செயற்பட்டு வருகின்றது. தற்போதைய அரசு கூட ஆட்சிக்கு வருவதற்கு முன்னர் எமது காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளுக்கு உரிய தீர்வு பெற்றுத் தரப்படும் என வாக்குறுதிகளை வழங்கியிருந்த போதிலும் இதுவரையில் எந்தவிதமான முன்னேற்றகரமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை.” – என்றனர்.











# மக்களை அலைக்கழிப்பதை - பழிவாங்குவதை உடன் நிறுத்தாவிடின் தண்டனைதான் ஒரே வழி!

## உள்ளூராட்சி மன்றங்களின் செயலாளர்களுக்கு வடக்கு ஆளுநர் வேதநாயகன் கடும் எச்சரிக்கை





ஒரு சில உள்ளூராட்சி மன்றங்களின் செயலாளர்கள் மக்களை அலைக்கழிப்பதை – பழிவாங்குவதை நிறுத்தாவிடின் எதிர்காலத்தில் அவர்களுக்கு எதிராக விசாரணைகளை முன்னெடுத்து தண்டனையை வழங்குவதைத் தவிர வேறுவழியில்லை என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் எச்சரிக்கைவிடுத்தார்.

வடக்கு மாகாண உள்ளூராட்சி மன்றங்களின் செயலாளர்களுடனான ஏப்ரல் மாதத்துக்கான கலந்துரையாடல் ஆளுநர் செயலகத்தில் இடம்பெற்றது.

கலந்துரையாடலின் ஆரம்பத்தில் கருத்துத் தெரிவித்த ஆளுநர்,

“தொடர்ச்சியாக கலந்துரையாடல்கள் நடத்தப்படுகின்றபோதும் இங்கு எடுக்கப்படும் தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவது மந்தமாக இருக்கின்றது. இதற்கும் அப்பால் சில உள்ளூராட்சி மன்றங்களின் செயலர்கள் தொடர்பில் மக்களிடமிருந்து முறைப்பாடுகள் கிடைக்கப் பெறுகின்றன.

மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகவே பதவிகள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. அதனை மறந்து சில உள்ளூராட்சி மன்றங்கள் செயற்படுகின்றன. உள்ளூராட்சி மன்றங்கள் சிலவற்றின் செயலர்கள் இழைக்கின்ற தவறுகளால் ஒட்டுமொத்தமாக எல்லோருக்குமே பாதிப்பு ஏற்படுகின்றது. எமது நிர்வாகக் கட்டமைப்பிலிருக்கின்ற இவர்களின் தவறுகளுக்காக பாதிக்கப்பட்ட மக்களிடம் எனது மனவருத்தத்தை வெளிப்படுத்தியிருக்கிறேன்.

முன்னைய ஆட்சிக் காலங்களில் எமது மாகாணத்தில் முதலீடு செய்வதற்கு முன்வந்த பலர் பல்வேறு காரணங்களால் குறிப்பாக இலஞ்சம் கோரியமையால் திரும்பிச் சென்றனர். அவர்கள் இப்போதும் மீண்டும் வருகின்றனர். அவர்களுக்குரிய ஒழுங்குகளை நேரிய சிந்தனையுடன் அதிகாரிகள் செய்து கொடுக்க வேண்டும்.” – என்று குறிப்பிட்டார்.

கடந்த கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்ட விடயங்களின் முன்னேற்றம் தொடர்பில் ஆளுநர் இதன் பின்னர் ஆராய்ந்தார். விவசாய உற்பத்திப் பொருட்களுக்கான 10 சதவீதக் கழிவு தொடர்பான விவகாரத்தில் ஒவ்வொரு சந்தையாக நடவடிக்கை எடுக்க தீர்மானித்திருப்பதாக வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் குறிப்பிட்டார். அந்தச் சந்தையுடன் தொடர்புடைய விவசாய அமைப்புக்களை முதல் கட்டமாக சந்திக்கவுள்ளதாகத் தெரிவித்தார். வீதிகளில் குப்பைகள் போடும் செயற்பாடு தொடர்கின்ற நிலையில் அதனைக் கட்டுப்படுத்துவதற்கு சி.சி.ரி.வி. கமராக்களைப் பொருத்துவதற்கான நடவடிக்கைகளை துரிதமாக முன்னெடுக்குமாறு ஆளுநர் அறிவுறுத்தினார்.

சட்டவிரோத கட்டடங்களுக்கு எதிராக உள்ளூராட்சி மன்றங்களின் செயலர்கள் நடவடிக்கை எடுப்பதற்கு தயக்கம் காண்பிக்கும் நிலைமை காணப்படுவதாக ஆளுநர் குறிப்பிட்டார். கடந்த காலங்களில் சட்டவிரோத கட்டுமானங்களை உள்ளூராட்சி மன்றங்கள் நேரடியாக இடித்தழிக்கக் கூடியதாக இருந்ததாகவும் தற்போது நகர அபிவிருத்தி அதிகார சபையின் கட்டுப்பாட்டினுள் உள்ளமையால் தம்மால் வழக்குத் தாக்கல் செய்யக் கூடியதே ஒரே வழி எனக் குறிப்பிட்டனர். இதன்போது தொடரப்பட்ட பல வழக்குகள் நீண்ட காலமாக நிலுவையில் உள்ளதாகவும் உள்ளூராட்சி மன்றங்களின் செயலர்கள் தெரிவித்தனர்.

குறிப்பாக யாழ். மாநகர சபையால் சட்டவிரோத கட்டடங்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு பின்னர் யாழ். மாநகர சபையாலேயே வழக்கு மீளப் பெறப்பட்ட சந்தர்ப்பங்களும் உள்ளன என ஆணையாளர் குறிப்பிட்டார். அவ்வாறு மீளப்பெறப்பட்ட வழக்குகள் தொடர்பில் தனித்தனியாக ஆராய்ந்து மீளவும் வழக்குத் தாக்கல் செய்யவுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

அதேபோல் வெள்ளவாய்க்கால்களை ஆக்கிரமித்து அமைக்கப்பட்டுள்ள கட்டடங்கள் சட்டவிரோதமானவையே. அதனை அகற்றுவதற்கான தொடர் நடவடிக்கை உள்ளூராட்சி மன்றங்களால் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட வேண்டும் எனவும் ஆளுநர் அறிவுறுத்தினார்.

மேலும், இந்த விடயங்களில் உள்ளூராட்சி மன்றங்களால் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் பகிரங்கப்படுத்தப்பட வேண்டும் என ஆளுநர் சுட்டிக்காட்டினார். மரம் நடுகையை ஒவ்வொரு உள்ளூராட்சிமன்றங்களும் ஊக்குவித்து செயற்படுத்தப்பட வேண்டும் எனவும் ஆளுநர் வலியுறுத்தினார்.

இதனைத் தொடர்ந்து வடக்கின் ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றங்களும் கட்டட அனுமதி, ஆதனப் பெயர் மாற்றம் தொடர்பில் கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்கள் அவற்றில் அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கை என்பன தொடர்பில் ஆராயப்பட்டன. இவற்றுக்கான அனுமதி வழங்குவதில் உள்ள தாமதங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

அவற்றைக் களைவதற்கு தொடர்புடைய திணைக்களங்களை எதிர்காலத்தில் அழைத்து ஆராயவும் தீர்மானிக்கப்பட்டது.

வவுனியா நகர சபை மாநகர சபையாக தரம் உயர்த்தப்பட்டுள்ள நிலையில் அதற்குரிய ஆளணிகள் வழங்குவது மற்றும் கட்டடங்கள் அமைப்பது தொடர்பிலும் ஆராயப்பட்டது.

மேலும், வீதிப் போக்குவரத்துத் தொடர்பில் கடந்த கூட்டத்தில் பொலிஸாருக்கு தெரியப்படுத்தியிருந்த நிலையில் அது தொடர்பில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக உள்ளூராட்சி மன்றங்களின் செயலர்கள் தெரிவித்தனர். அதேபோல் நகர அபிவிருத்தி அதிகார சபையுடனான விவகாரங்களிலும் முன்னேற்றம் உள்ளதாகவும் குறிப்பிட்டனர்.

இந்தக் கலந்துரையாடலில் வடக்கு மாகாண பிரதம செயலாளர், வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர், வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர், வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சின் மூத்த உதவிச் செயலாளர், ஒவ்வொரு மாவட்டங்களினதும் உள்ளூராட்சி உதவி ஆணையாளர்கள், உள்ளூராட்சி மன்றங்களின் செயலாளர்கள் பங்கேற்றனர்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## ஏன் இந்த நடிப்பு?

புதிய சட்டங்களை வகுத்தேனும் நாட்டில் இனவாதம் தோற்கடிக்கப்படும் என ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கா தெரிவித்திருக்கிறார்.

நாட்டில் இனவாதத்தை தோற்கடிக்க - இல்லாமல் செய்ய - முதல் தேவை சட்டங்கள் அல்ல. இனவாதத்தை இல்லாமல் செய்வதற்கான அடிப்படை என்ன என்பதை புரிந்து கொள்வதற்கு இன்னும் தென்னிலங்கை தயாராகவில்லை என்பதைத்தான் ஜனாதிபதியின் இந்தக் கூற்று காட்டுகின்றது.

கைப்புண்ணுக்கு கண்ணாடி எதற்கு?

இலங்கையில் எண்ணிக்கையில் பெரும்பான்மையினரான சிங்களவர்கள் மற்றைய இனத்தவரை அடக்கி, ஒடுக்கி, அடிமைகள் போலாக்கி, ஆளுமை செய்ய முற்பட்டமைதான் - பேரினவாதத்தின் மேலாண்மைத் திமிர்தான்- இலங்கையில் இனவாதம் முற்றி, நாட்டையே சீரழிக்கும் நிலைமையை ஏற்படுத்தியது என்பது வெளிப்படையானது.

இலங்கை சுதந்திரம் அடைகின்ற காலத்துக்கு முன்னரே, தென்னிலங்கையில் இருந்த தலைவர்கள் - எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா போன்றவர்கள் - சமஷ்டி ஆட்சி முறையை இந்த நாட்டில் கொண்டு வர விரும்பி முன்மொழிந்த போது, சிறுபான்மையினரான தமிழர்கள் அதை நாடவில்லை. ஏற்றுக்கொள்ளவில்லை. அந்த யோசனையை ஏறெடுத்துப் பார்க்கவில்லை. இந்த நாட்டின் பெரும்பான்மையினரான சிங்களவர்களோடு ஒற்றுமையாக, ஒற்றை ஆட்சியில் கீழ் இணைந்திருக்க முடியும் என்ற இனவாதமற்ற நம்பிக்கையோடுதான் அவர்கள் அந்தச் சமயத்தில் சமஷ்டிக் கோரிக்கை தொடர்பில் சிரத்தை காட்டாமல் பாராமுகமாக நடந்தார்கள்.

ஆனால் கடைசியில் என்ன நடந்தது? இந்த நாட்டிலிருந்து ஆங்கிலேயர் வெளியேறிய கையோடு பௌத்த - சிங்களப்பேரினவாதமேலாண்மையின் கொடூர- குரூர- முகம் அப்பட்டமாக வெளிப்பட்டது. இந்த மண்ணை வளப்படுத்திய சுமார் 10 லட்சம் மலையகத் தமிழர்கள் நாடற்றவர்கள் ஆக்கப்பட்டார்கள். வடக்கையும் கிழக்கையும் தாயகமாகக் கொண்ட தமிழர்கள் தங்கள் தனித்துவத்தை இழந்து, தங்கள் தாயகத்தை - பூர்வீக வாழ்விடத்தை - சிங்களத்திடம் பறி கொடுக்கும் அவலச் சூழ்நிலைக்கு உள்ளானார்கள். பேரினவாதத்தின் மேலாண்மை அத்தகைய ஆக்கிரமிப்பை முன்னெடுத்தமைதான் இந்த நாட்டில் இனங்களுக்கு இடையில் பிளவும் குரோதமும் முரண்பாடும் முற்றி நாடு இந்த நிலைக்கு வரும் சூழ்நிலை உருவாக அடிப்படைக் காரணம்.

பேரினவாதத்தின் மேலாதிக்கத் திமிரை அடியோடு ஒடுக்கிக் கட்டுப்படுத்தினால், இந்த நாட்டில் அமைதி, சமாதானம், புரிந்துணர்வு, நல்லிணக்கம், இன சௌஜன்யம் எல்லாம் தானாகவே மலரும். அவற்றை ஏற்படுத்துவதற்கு புதிதாக சட்டங்கள் தேவை இல்லை. இலங்கை நாடு ஒப்பமிட்டுள்ள சர்வதேச பட்டயங்களில் இருக்கும் விதிமுறைகளை நடைமுறைப்படுத்தினாலேயே நாட்டில் இனவாதத்தை ஓரளவு கட்டுப்படுத்தி விடலாம்.

ஆனால் இனவாதத்தைக் கட்டுப்படுத்தும் இந்தச் சட்டங்கள், ஒழுங்கு விதிகள் எல்லாம் பேரினவாத மமதையோடு கூக்குரலிடும் மதத் தலைவர்கள், அரச அதிகாரிகள் மற்றும் இனவாதிகள் விடயத்தில் மௌனத்தைப் பேணுகின்றன. இருக்கின்ற சட்டங்களைச் சரியாகப் பிரயோகித்து, இனவாதத்தை ஒழிக்கும் தீவிரத்தை அரசு பற்றுறுதியோடு - திட சங்கற்பத்தோடு - நடைமுறைப்படுத்திக் காட்ட வேண்டும். அதை விடுத்து, இனவாதத்தை கட்டுப்படுத்த புதிய சட்டங்களை கொண்டு வருவோம் என்று கயிறு விடுவது மக்களை ஏமாற்றும் ஜகத்தலப் பிரதாப நடவடிக்கையே - நடிப்பே - அன்றி வேறில்லை.

# ‘ஏக்கிய ராஜ்ய’ முறைமையை தமிழரசுக் கட்சி ஏற்றுக்கொள்ளாது

## கட்சித் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தெரிவிப்பு

இலங்கைத் தமிழரசுக் கட்சி “ஏக்கிய ராஜ்ய” முறைமையை ஏற்றுக்கொள்ள மாட்டாது. அதுமட்டுமல்ல அவற்றை முழு வீச்சில் எதிர்க்கும் என்று இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தெரி வித்துள்ளார்.

“ஏக்கிய ராஜ்ய” முறைமையை இலங்கை தமிழரசுக் கட்சி ஏற்றுக் கொண்டுவிட்டதாக அண்மைய தேர்தல் பரப்புரை கூட்டங்களில் எதிர்தரப்பி னரால் தெரிவிக்கப்படும் கருத்து தொடர்பில் ஊடகங்கள் எழுப்பிய கேள்விக்கு பதில் அளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கைத் தமிழரசுக் கட்சி ஒற் றையாட்சியை ஆதரிக்கிறது என்னும் கருத்தை நாம் தெளிவாக மறுத்துள்ள போதும் சிலர் பொது வெளியில் தொடர்ந்து பேசுகின்றனர்.

முதலில், ஒற்றையாட்சியை ஏனைய அரசியல் கட்சிகள் ஏற்றுநின்ற காலகட்டத்தில் அதனை மறுதலித்து சமஷ்டி முறையான அரசமைப்பை கோரி உருவாக்கப்பட்டதே , சஷ்டிக் கட்சி என்றும் அழைக்கப்பட்ட இலங் கைத் தமிழரசுக் கட்சி என்பதை நினைவுபடுத்த விரும்புகிறேன்.

ஜனாதிபதி அநுர குமார திசநாயக் கவோ, அவரது கட்சி சார்ந்த அமைச் சர்களோ அல்லது ஜே. வி.பி. கட்சியின் முக்கியர்த்தர் எவருமோ “ ஏக்கிய ராஜ்ய” என்ற சொற்கள் அடங்கிய அரசியல் அமைப்பு வரைவில் இருந்து புதிய வரைபை தொடரலாம் என்று எந்த இடத்திலும் கூறவில்லை.



அப்படிக் கூறியிருந்தால் நாம் அதனை ஏற்பதாகக் கூறியதாக சொல்பவர்கள், அவர்கள் எங்கே எப்பொழுது, கூறினார்கள் என்பதையும் நாம் எப்பொழுது எங்கே அவ்வாறு ஏற்பதாக கூறினோம் என்பதையும் ஆதாரத்துடன் தெரிவிக்க வேண்டும்.

அதை விடுத்துப் பொதுவாகச் சகட்டு மேனிக்கு பேசுவது பொருத்தம் அற் றதும் அபத்தமானதும் ஆகும்.

“ஏக்கிய ராஜ்ய” என்ற சொற்பதம் பற்றி 2019 ஆம் ஆண்டுக்குப் பின்பு சிங்களவர் எவரும் பேசுவது இல்லை. அது அரசாலும் எம்மாலும் எப்போதோ கைவிடப்பட்ட ஒன்று.

It is an abandoned one. ஆனால் இங்கு மட்டும் இல்லாத ஒரு ஊருக்கு பெயர் வைப்பது போன்று இதனை காழ்ப்புணர்வு காரணமாக தமிழரசுக் கட்சியின் பெயரைக் கெடுக்கும் நோக் கில் மீண்டும் மீண்டும் பேசுகிறார்கள்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் என்ற ரீதியிலும் கட்சியின் மிக சிரேஷ்ர நிலையில் உள்ளவன் என்ற வகையிலும் கட்சியின் கொள்கை வகுத்தலில் முக்கியபங்கு வகிப்பவன் என்ற வகையிலும் எமது கட்சி ஒற்றை யாட்சி முறைமையையோ “ஏக்கிய ராஜ்ய” என்ற முறைமையையோ ஏற்றுக்கொள்ள மாட்டாது என்றும் அது மட்டுமல்ல அவற்றை முழு வீச்சில் எதிர்க்கும் என்பதையும் தெரிவித்து கொள்கின்றேன்.

அவ்வாறு ஏதாவது முன்மொழிவு அரசால் முன்வைக்கப்பட்டால் அதனை எமது எட்டு நாடாளுமன்ற உறுப்பினர்க ளும் நாடாளுமன்றத்தில் எதிர்வாதம் செய்து எதிர்த்து வாக்களிப்பார்கள் என்றும் ஏற்கெனவே நான் கூறி இருக்கிறேன். இதனை மீண்டும் வலி யுறுத்துகிறேன்.

இந்தக் கருத்தை தெரிவிக்கும் பொறுப்பும் உரிமையும் எனக்கு உண்டு என்பதையும் திடமாக வலியுறுத்து கிறேன்.

ஒருவேளை நான் ஒரு மேட்டுக்குடி சாராதவன் என்பதால் யாரவது மேட்டுக் குடி சார்ந்தவர்தான் சொல்ல வேண்டும் என நினைக்கிறார்களோ தெரிய வில்லை.

அவர்களுக்கு எல்லாம் நான் கூறிக் கொள்வது, இலங்கைத் தமிழரசுக் கட்சி சாமானிய மக்களுக்கானது. அவர்களில் ஒருவன் நான். ஆயினும் எந்த மேட்டுக்குடியினர்க்கும் குறைந்த வனும் அல்ல. நீங்கள் எதிர்பார்ப்பது போல் இனிமேல் எந்த மேட்டுக்குடி மேலாதிக்ககாரரும் இலங்கைத் தமிழரசுக் கட்சிக்குள் இறக்குமதி செய்யப்பட மாட்டார்கள் என்பதையும் ஆணித்தரமாக பதிவு செய்கிறேன்.- என்றார்.

## உள்ளூராட்சி சபை தேர்தல் களம்

VOTE

# காத்தான்குடி நகர சபையின் வேட்பாளர் கலந்துரையாடல்

(எஸ். சினீஸ் கான்)

நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில், காத்தான்குடி நகர சபையில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பாக போட்டியிடும் வேட்பாளர்களுடனான கலந்துரையாடல் நேற்று வியாழக் கிழமை (24) இடம்பெற்றது.

இந்த நிகழ்வில், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிர ஸின் பிரதித் தலைவர் கலாநிதி எம். எல்.ஏ.எம் ஹிஸ்புல்லாஹ் ஆகியோர் கலந்துகொண்டு உரையாற்றினர்.

இதன்போது, கட்சியின் உயர்பீட உறுப்பினர்கள், காத்தான்குடி நகர சபை வேட்பாளர்கள், கட்சி முக்கி யஸ்தர்கள் மற்றும் ஆதரவாளர்கள் பலர் கலந்துகொண்டனர்.



# உள்ளூராட்சி சபை தேர்தல் களம்

## அரசியலில் வாய்ப்புக் கிடைக்கும் பட்சத்தில் சமூக சேவையில் முழுமூச்சுடன் ஈடுபடுவேன்

### மான் சின்ன வேட்பாளர் தம்பித்துரை பிரசாத் தெரிவிப்பு

(எஸ். நிதர்ஷன்)

சமூக சேவைகளில் ஈடுபட்டுவரும் எனக்கு அரசியல் அதிகாரமும் கிடைக்கும் வேளை எனது சமூக சேவைகளை முழுமூச்சுடன் முன்னெடுப்பேன் என்று தமிழ் மக்கள் கூட்டணியின் மான் சின்னத்தில் கோப்பாய் பிரதேச சபையில் ஜே - 281 மற்றும் ஜே -285 ஆகிய கிராம சேவையாளர் பிரிவை உள்ளடக்கிய பத்தமேனி இரண்டாம் வட்டாரத்தில் போட்டியிடும் தம்பித்துரை பிரசாத் தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள செய்தி குறிப்பிலையே அவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

நடைபெறவுள்ள உள்ளூராட்சி தேர்தலில் வலிகாமம் கிழக்கு (கோப்பாய்) பிரதேச சபையில், தமிழ் மக்கள் கூட்டணி சார்பில் பத்தமேனி வட்டாரத்தில் மான் சின்னத்தில் போட்டியிடுகிறேன்.



சமூக செயற்பாட்டாளராக செயற்பட்டு வருகிறேன். எவ்வித அரசியல் அதிகாரங்களும் இன்றியே எனது சேவைகளை முன்னெடுத்தேன்.

தற்போது தேர்தல் அரசியலில் பிரவேசித்துள்ளேன். எனக்கு வாக்களித்து எனக்கான அரசியல் அதிகாரங்களை எமது மக்கள் தந்தால் , மக்களுக்காக முழு மூச்சுடன் அரசியலுடன் எனது சமூக சேவை பணிகளையும் முன்னெடுப்பேன்.

எமது கட்சியின் பிரதான கோஷமான “தூய கரங்கள் , தூய நகரம் “ என்பதற்கு இணங்க ஊழலற்ற வகையில் எமது பிரதேசத்தை எமது பிரதேச இளையோர்களுடன் கை கோர்த்து கட்டியொழுப்புவேன்.- என்றுள்ளது.

## மக்களுக்கு பணியாற்றுவதே எனது ஒரே நோக்கமாகும்!

### தைக்கா நகர் வட்டார வேட்பாளர் றியாஸ்

(றிபாஸ்)

ஆண்டாண்டு காலமாக ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கு நூறு வீதம் வாக்களிக்கும் ஒரு பிரதேசமாக அட்டாளைச்சேனை பிரதேசம் இருந்து வந்துள்ளது.

நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்ற தேர்தலில் அவ்வாறே வாக்களித்து என்னையும் வெற்றி பெறச்செய்வதன் மூலம் இன, மத வேறுபாடுகளுக்கு அப்பால் எல்லோரையும் அரவணைத்துக் கொண்டு முடியுமான அபிவிருத்தி பணிகளை முன்னெடுக்க முடியும்.

இவ்வாறு தைக்கா நகர் வட்டார வேட்பாளர் எஸ்.ஐ.எம்.றியாஸ் தெரிவித்துள்ளார்.

அட்டாளைச்சேனை பிரதேசத்தில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்



போதே அவர் இவ்வாறு கூறினார்.

தொடர்ந்தும் அவர் தனது உரையில், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீமின் வழிகாட்டலின் கீழ் அம்பாறை மாவட்டத்தில் அதிகமான உள்ளூராட்சி மன்ற சபைகளை கைப்பற்றுவதுடன் அட்டாளைச்சேனை பிரதேச சபையையும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கைப்பற்றி ஆட்சி அமைக்கும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

அட்டாளைச்சேனை பிரதேசத்தில் காணப்படுகின்ற வடிகான், தெருவிளக்குகள், குறுக்கு வீதிகள், சுகாதாரம், கல்வி பொருளாதாரம்,வாழ்வாதாரம் போன்ற பல்வேறுபட்ட பிரச்சினைகளை பிரதேச சபையின் ஊடாக செய்து கொள்ளவது மாத்திரமல்ல மத்திய அரசின் ஊடாக எமது கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் நிதி உதவி மூலமும் இந்தப் பிராந்தியத்துக்கு என்னவெல்லாம் செய்ய முடியுமோ அவைகளை செய்வதற்கு ஒருபோதும் பின்னிக்கப் போவதில்லை .- என்றார்.

# உள்ளூராட்சி சபை தேர்தல் களம்




### வட்டாரத் தேர்தலையும் தாண்டி

# தமிழ் இனத்துக்கான தேர்தலாக இந்தத் தேர்தலை கருதவேண்டும்!

### சாணக்கியன் எம்.பி. தெரிவிப்பு

(அபு அலா, மட்டு.துஷாரா)

மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழரசுக் கட்சிக்கு மூன்று பாராளுமன்ற பிரதிநிதிகள் கிடைக்கப்பெறுவதற்கான ஆணையை எமது மாவட்ட மக்கள் வழங்கினார்கள். அதன் மூலம் எமது மக்களுடைய பிரச்சினைகளை தீர்த்து வைப்பதற்கான வழி வகைகளை எமது கட்சியும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் மிகச் சிறப்பாக முன்னெடுத்து வருகின்றனர் என்று மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ராசமாணிக்கம் சாணக்கியன் தெரிவித்தார்.

அதேபோன்று எமது மட்டு.மாநகர சபைக்கு உட்பட்ட மக்களின் தேவைகளையும், குறைபாடுகளை சிறப்பாக முன்னெடுத்துச் செல்லவேண்டும் என்று எண்ணி, உங்களது சீலாமுனை வட்டாரத்தில் இளம் துடிப்புள்ள ஒருவரான சுதர்சனை எமது கட்சி களமிறங்கியுள்ளது. அவரை வெற்றிபெறச் செய்து உங்களின் பிரதேச தேவைகளை நிவர்த்தி செய்யகொள்ள முடியும் என்றும் சாணக்கியன் எம்.பி. சுட்டிக்காட்டினார்.

தமிழரசுக் கட்சியின் 11 ஆம் வட்டார சீலாமுனை, பெரிய உப்போடை மற்றும் சின்ன உப்போடை வேட்பாளர் த. நடராசா சுதர்சன் தலைமையில் நேற்று (24) சீலாமுனையில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

மட்டு. மாவட்டத்திலுள்ள தமிழ் மக்கள் தமிழரசுக் கட்சிக்கு ஆணையை வழங்குவதற்கு தயாராக இருக்கின்றார்கள். ஏனென்றால் மாநகர சபையில் அதிகளவான வளங்கள் காணப்படுகின்றது. கடந்த 2023 ஆம் ஆண்டு மாநகர சபையினுடைய ஆட்சிக்காலம் முடிவடைந்ததன் பின்னர் சபைக்குள் இருந்த பல நிதிகளை, முன்னாள் ராஜாங்க அமைச்சர்களாக இருந்த பிள்ளையான் போன்றோர் கையாடல்களை செய்திருந்தார்கள்.

அதுமாத்திரமல்லாமல், மாநகர சபை எல்லைக்குள் இருக்கும் பல வளங்களை எடுத்து பல சட்ட விரோதமான செயல்களும் நடந்து இருக்கின்றது. இந்த விடயங்களில், கடந்த 2018 ஆம் ஆண்டு தொடக்கம் 2023 ஆம் ஆண்டு வரை மட்டக்களப்பு மாநகர சபைக்குள் இருந்த இலங்கை தமிழரசு கட்சி சேர்ந்த உறுப்பினர்கள் மிக நேர்மையாக செயல்பட்டார்கள் என்பதை நான் பெருமையோடு சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

குறிப்பாக, சீலாமுனை பகுதியின் ஆற்றங்கரை ஓரத்தை ஒரு சுற்றுலாத் தலமாக அபிவிருத்தி செய்வதான சிறந்த முன்மொழிவுகளை எமது வட்டார வேட்பாளர்கள் தெரிவு செய்திருக்கின்றார்கள். இவற்றை நடைமுறைக்கு கொண்டு வந்தால் மாநகர சபை எல்லைக்குள் வருமானங்களை அதிகரிக்கக்கூடிய சில திட்டங்களாக அவற்றை நாம் காணக்கூடியதாக இருக்கின்றது.

அந்தவகையில், இந்தத் தேர்தல் வட்டாரத் தேர்தலையும் தாண்டி, தமிழ் இனத்துக்கான ஒரு தேர்தலாகக் கருத்தில் எடுத்து இலங்கை தமிழரசுக் கட்சிக்கு வாக்களிக்க வேண்டும்.- என்றார்.








# தந்தையை இழந்த பிள்ளைகளும் கல்வியில் சிறந்து விளங்க வேண்டும்!

## சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் இஸ்ஸடீன் தெரிவிப்பு

(அபு அலா )

பொத்துவில் பிரதேசத்தில் தந்தையை இழந்து வறிய கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களின் பிள்ளைகளும் ஏனைய பிள்ளைகளைப் போன்று கற்றல் மற்றும் விளையாட்டுத்துறை போன்ற செயற்பாடுகளில் சிறந்து விளங்க வேண்டும் என்ற நோக்கில் பல முன்னெடுப்புகளை முன்னெடுத்து வருகின்றோம் என்று அட்டாளைச்சேனை பிரதேச சுகாதார வைத்திய அதிகாரியும், கழகத்தின் பிரதம ஆலோசகரும், சமூக சேவையாளருமான வைத்தியர் ஏ.எம்.எம்.இஸ்ஸடீன் தெரிவித்தார்.

பொத்துவில் மத்திய விளையாட்டுக் கழகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நிகழ்வுக்கு பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

தந்தையை இழந்து வறுமைக் கோட்டின் கீழ் வாழும் பிள்ளைகளுக்கு படிக்க வேண்டும் என்ற எண்ணம், ஆசை இருந்தாலும் அவர்களின் குடும்ப சூழ்நிலை காரணமாக கல்வியை இடைநடுவில் நிறுத்திவிட்டு பெரும்பாலும் வேலைக்கு அமர்த்தப்படுகின்றனர். அந்தப் பிள்ளைகள் நன்கு கவனிக்கப்பட வேண்டியவர்களாக இருக்கின்றனர்.

மேலும், பாடசாலை செல்லாமல் இருக்கும் பிள்ளைகளுக்கான கல்வி பெறும் உரிமை கட்டாயம் அளிக்கப்பட வேண்டியுள்ளது. அவர்களின் வளர்ச்சி, விருத்திக்கு அவசியமான சுகாதார நலனோம்பல் விடயங்களும் கருத்தில் கொள்ளப்பட வேண்டும்.- என்றார்.

தமிழ், சிங்கள மற்றும் முஸ்லிம் குடும்பங்களைச் சேர்ந்த 50 குடும்பங்களின் பிள்ளைகளுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கி வைப்பதற்கான நிதியுதவியை அட்டாளைச்சேனை பிரதேச சுகாதார வைத்திய அதிகாரியும், கழகத்தின் பிரம ஆலோசகரும், சமூக சேவையாளருமான வைத்தியர் ஏ.எம். எம்.இஸ்ஸடீன் சொந்த நிதியில் வழங்கியமை குறிப்பிடத்தக்கது.



# இந்து- ஸ்ரீலங்கா உருதுக் கவிதைகள் செயலமர்வு தென்கிழக்கு பல்கலையில்

(நூருல் ஹுதா உமர்)

இலங்கை தென் கிழக்கு பல் கலைக் கழகத்தின் கலை கலாசார பீடத்தின் மொழித் துறையால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்து - ஸ்ரீலங்கா உருதுக் கவிதைகள் தொடர்பான செயலமர்வு மொழித் துறைத் தலைவர் கலாநிதி ஏ. விக்கிரமரத்ன தலைமையில் பீடத்தின் கேட்போர் கூடத்தில் இன்று (25) இடம்பெற்றது.

மொழிகள் தொடர்பான விரிவுரையாளர்கள் மாணவர்கள் பங்குகொண்டிருந்த இந்த நிகழ்வுக்கு பிரதம அதிதியாக கலை கலாச்சார பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் எம்.எம். பாஸில் கலந்து கொண்டார்.





நிகழ்வுக்கு இந்தியாவில் இருந்து வருகைதந்திருந்த இந்திய உருதுக் கவிஞர் மற்றும் பேராசிரியர் முஹமத் மசூத் அஹமத் விஷேட பேச்சாளராக கலந்து கொண்டு உரையாற்றினார்.

நிகழ்வின்போது பீடாதிபதி உள்ளிட்ட பல்கலைக்கழக சமூகத்தினரால் விஷேட பேச்சாளர் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார்.

அதேவேளை, பேராசிரியர் முஹமத் மசூத் அஹமத் பல்கலைக்கழக நூலகத்துக்கு ஒரு பகுதி நூல்களை பீடாதிபதியிடம் ஒப்படைத்தார்.

பேராசிரியரோடு இணைந்து சபுத்தி அமைப்பின் உறுப்பினர்களும் கலந்து கொண்டிருந்தனர்.

நிகழ்வின்போது சிரேஷ்ட பேராசிரியர் எம்.ஐ.எம். கலில், பேராசிரியர் எம்.ஏ. எஸ்.எவ். சாதியா, சிரேஷ்ட விரிவுரையாளர்களான என். சுபராஜ், கே.ஆர். பாத்திமா சீபா, விரிவுரையாளர் ஏ. அப்துல் ரஸ்ஸாக் உள்ளிட்டவர்களுடன் மாணவர்களும் பங்கு கொண்டிருந்தனர்.

# சிறுபான்மையின தமிழ், முஸ்லிம் பிரதிநிதிகள் ஆக்கபூர்வமாக அரசிடம் எதையும் முன்வைப்பதில்லை

## ஐக்கிய தேசிய கட்சி முன்னாள் உறுப்பினர் யெஹியா எம். இப்ளார் விசனம்

(ஸ்ரீநிவாசகம் ரவீந்திரன்)

தேசிய மக்கள் சக்தியின் அரசில் அங்கம் வகிக்கும் சிறுபான்மையின தமிழ், முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்கள், பிரதியமைச்சர்கள் தமது மக்கள் சார்பாக ஆக்க பூர்வ செயற்பாடுகள் எதனையும் அரசிடம் முன்வைப்பதில்லை என்று சப்ரகமுவ மாகாண சபையின் ஐக்கிய தேசிய கட்சி முன்னாள் உறுப்பினர் யெஹியா எம். இப்ளார் விசனம் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசிய கட்சியும், ஐக்கிய மக்கள் சக்தியும் கடந்த தேர்தலில் ஒன்றிணைந்து போட்டியிட்டிருந்தால் தற்போது நாட்டில் தேசிய மக்கள் சக்தியின் அரசாங்கம் அமைந்திருக்காது என்றும் தெரிவித்தார்.

இரத்தினபுரி நகரிலுள்ள அவரது அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்றின் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில், கடந்த வருடம் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலின் போது இக்கட்சிகள் இரண்டும் ஒன்றாக இணைந்து தேர்தலில் ஒரே குழுவில் போட்டியிடும் என்று பெரும்பாலான நாட்டு மக்கள் எதிர்ப்பார்த்தனர். ஆனால் அவை நடைமுறையில் சாத்தியப்படவில்லை.

அதன் பின்னர் பொதுத் தேர்தலிலாவது இக்கட்சிகள் இரண்டும் ஒன்றிணைந்து ஒரே அணியாக போட்டியிடும் என்று எதிர்ப்பார்த்தனர். அதுவும் சாத்தியப்படவில்லை. இதனால் இன்று நாட்டின் ஆட்சியதிகாரம் மக்கள் விடுதலை முன்னணி சார்பு தேசிய மக்கள் சக்தியிடம் போய் விட்டது.

இதனால் நாட்டு மக்களிடையே குறிப்பாக தமிழ், முஸ்லிம் மக்கள் ஒருவித அச்ச உணர்வுடனேயே உள்ளனர்.

இந்த தேசிய மக்கள் சக்தியில் அங்கம் வகிக்கும் சிறுபான்மை இனத்தைச் சோந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் உள்ளிட்டவர்கள் கூட இன்று திரிசங்கு நிலையில் உள்ளனர் அவர்களால் தனித்து தமிழ் முஸ்லிம் மக்களுக்கு எவ்வித சேவைகளையும் செய்ய முடியாது கைட்டி



பொம்மையாகவுள்ளனர்.

இதன் காரணமாக இந்தத் தேசிய மக்கள் சக்தி ஆட்சிக்கு வந்து ஆறு மாதங்கள் கடந்த நிலையிலும் கூட சிறுபான்மையின மக்களுக்கு குறிப்பாக முஸ்லிம் மக்களுக்கு எவ்விதமான நன்மையும் ஏற்படவில்லை.

இலங்கை வாழ் மக்கள் அனைவரும் ஒரே தாய் மக்கள். அவர்கள் அனைவரும் இலங்கையர்கள் என்று கூறுகின்றது. ஆனால் நடைமுறையில் அரசின் செயற்பாடுகள் அனைத்தும் சிறுபான்மையின மக்களுக்கு எதிராகவே உள்ளன.

குறிப்பாக பௌத்த மதத்தை முன்னிறுத்தியே அரசின் செயற்பாடுகள் உள்ளன. நாட்டிலுள்ள சகல மதங்களின் விவகாரங்களையும் நாட்டு மக்களான தமிழ், சிங்களம், முஸ்லிம் உள்ளிட்ட அனைத்து மக்களின் மத விவகாரங்களை கவனிப்பதற்கென அமைக்கப்பட்ட அமைச்சானது புத்தசாசன சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு என்றே குறிப்பிடப்பட்டுள்ளது.

நாட்டிலுள்ள அனைத்தின மக்களும் ஒரே தாய் மக்கள் என்றால் அவர்களுக்கு சேவை செய்யவென அமைக்கப்பட்ட அமைச்சு எதற்காக புத்தசாசன அமைச்சு என்று பெயரிடப்பட வேண்டும்.

கடந்த கால ஆட்சியின் தவறை திருத்துவதாக கூறும் அரசு புத்தசாசன அமைச்சுக்குப் பதிலாக மத விவகார அமைச்சு என்று பெயரிட முடியாது உள்ளது.

அவ்வாறு மாற்றினால் நாட்டில என்ன நடக்கும் என்பது நான் கூற வேண்டியதில்லை.

அரச் சிறுபான்மை மக்களான தமிழ் முஸ்லிம் மக்களை திட்டமிட்டு ஏமாற்றி வருகின்றது.

ஈஸ்டர் தாக்குதல் குறித்து அரசின் போக்கும் எமக்கு இதனையே காட்டுகின்றன. அது குறித்து அரசு அவ்வப்போது வெளியிடும் தகவல்களும் அறிக்கைகளும் ஒன்றுக்கு ஒன்று முரணாகவே உள்ளன.

இந்த அரசின் ஆறுமாத ஆட்சியில் மக்கள் விரக்தியின் எல்லைக்கே சென்று விட்டனர். குறிப்பாக கிராமிய மற்றும் தமிழ் முஸ்லிம் மக்கள் இன்று தமது எதிர்காலம் குறித்து அச்சம் கொள்கின்றனர்.

அரசு சிறுபான்மையின மக்கள் குறித்து காலையில் ஒன்று கூறினால் மாலையில் அதனை வேறு விதமாக கூறுகின்றது.

இரத்தினபுரி நகரத்தின் பெரும் பகுதி ஏற்கனவே கைவிடப்பட்ட களனி வெளி ரயில் பாதையிலே அமைந்துள்ளது. இப்பாதையில் பெரும் எண்ணிக்கையான அதாவது நூற்றுக் கணக்கான கடைகளும் வர்த்தக நிலையங்களும் மற்றும் வீடுகளும் அமைக்கப்பட்டுள்ளன. இவ்வாறு அமைக்கப்பட்ட கட்டடங்கள் பெரும் பாலும் பல மாடிகள் கொண்டவை. சிறுபான்மையின மக்களுக்குச் சொந்தமான பல கோடிகள் பெறுமதியானவை. இந்தக் கைவிடப்பட்ட, களனிவெளி ரயில் பாதையை அவிசாவளையில் இருந்து இரத்தினபுரி நகரினூடாக தென்பகுதிவரை கொண்டு செல்வதாக அரசு தற்போது அடிக்கடி கூறி வருகின்றது. அவ்வாறு ரயில் பாதை அமைக்கப்பட்டால் இப்பாதையில் அமைக்கப்பட்டுள்ள வீடுகள் மற்றும் வர்த்தக நிலையங்கள், கடைகள் என்பன 24 மணித்தியாலயங்களுக்குள் அகற்றப்பட வேண்டும். அவ்வாறு அகற்றப்பட்டால் எமது மக்களுக்கு அரசு நிவாரணம் வழங்க வேண்டும்.- என்றார்.







# ஞானச்சுடர் 328 ஆவது மலர் வெளியீடும் உதவி வழங்கலும்

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில், ஆச்சிரம முதல்வர் சாதனைத் தமிழன் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில், இன்று வெள்ளிக்கிழமை ஞானச்சுடர் சித்திரை மாத 328 ஆவது மலர் வெளியீட்டு நிகழ்வும் உதவி வழங்கலும் இடம்பெற்றன.

வெளியீட்டுரையை இளைப்பாறிய கிராமசேவையாளர் க.ஸ்ரீஸ்கந்தராசாவும், மதிப்பீட்டுரையை சிரேஷ்ட சட்டத்தரணியும், பதில் நீதி வானுமான சோ.தேவராஜாவும் நிகழ்த்தினர்.

அதனைத் தொடர்ந்து சிறப்பு பிரதிகளும் வழங்கப்பட்டன.



உதவித் திட்டங்களாக, 291,000 ரூபா பெறுமதியில் 06 மாணவர்களுக்கு சைக்கிள்கள் வழங்கப்பட்டன.

காரைநகர்,களபூமி கிராமத்தை சேர்ந்த மருதனார்மடம் நுண்கலைக் கல்லூரியில் கல்வி கற்கும் பல்கலைக் கழக மாணவி, யாழ்ப்பாணம், அச்செழு பகுதியை சேர்ந்த அச்செழு சைவப் பிரகாச வித்தியாலயத்தில் தரம் 07 இல் கல்வி கற்கும் மாணவி, சுழிபுரம், பொன்னாலை மேற்கு பகுதியை சேர்ந்த மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயத்தில் தரம் 08 இல் கல்வி கற்கும் மாணவி, வேலணை, 06 ஆம் வட்டாரத்தை சேர்ந்த மாணவி, பலாலி வடக்கு, வசாவிளான் பகுதியை சேர்ந்த மாணவி, தெல்லிப்பளை, மாவைகலட்டி பகுதியை சேர்ந்த மாணவி ஆகியோருக்குச் சைக்கிள்கள் வழங்கப்பட்டன.





# தனியாருக்கு தாரை வார்த்த திக்கம் வடிசாலையை மீளவும் சங்கங்களிடம் வழங்குவதற்குத் தீர்மானம்

## *அந்த தீர்மானத்தை வெளிப்படுத்த கைதடியில் இருந்து திக்கம்வரை பனை அபிவிருத்திச்சபைத் தலைவர் நடைபயணம்*

(த.சுபேசன்)

கடந்த அரசால் முறைகேடான விதத்தில் தனியாருக்கு தாரை வார்க் கப்பட்ட திக்கம் வடிசாலையை மீளவும் அந்தந்த பனை தென்னை வள கூட்டுறவுச் சங்கங்களிடமும் தொழில் துறை சார்ந்தவர்களிடமும் வழங்க பனை அபிவிருத்திச் சபையின் பணிப்பாளர் சபை தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியிருந்தது.

இந்தத் தீர்மானத்தை வடமராட்சி பனை தென்னை வள கூட்டுறவுச் சங்கங்களுக்கு தெரியப்படுத்தும் முகமாகவும் திட்டமிட்டு மறைக்கப்பட்ட திக்கம் வடிசாலையின் பெருமையை இளைய தலைமுறையினர் அறிந்து கொள்ள ஏதுவாகவும் இன்று (25) வெள்ளிக்கிழமை காலை பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் வி. சகாதேவன் கைதடியில் அமைந்துள்ள பனை அபிவிருத்திச்சபை அலுவலகத்தில் இருந்து திக்கம் வடிசாலை வரை விழிப்புணர்வு நடை பயணம் ஒன்றை முன்னெடுத்திருந்தார்.

இது தொடர்பாக பனை அபிவிருத்திச்சபையின் தலைவர் வி.சகாதேவன் கருத்துத் தெரிவிக்கையில்,

25 வருட காலமாக திக்கம் வடிசாலை விவகாரம் பேசு பொருளாகவும் அரசியல் மயப்படுத்தப்பட்டும் இருந்து வருகின்றது.

இன்று உள்ளஇளம் தலைமுறைக்குத் திக்கம் என்றால் என்னவென்று தெரியாமல் மறைக்கப்பட்டு ஒரு சமுதாயத்தினுடைய எழுச்சி ஒடுக்கப்பட்டுள்ளது. திக்கம் வடிசாலை விவகாரம் மக்கள் மயப்படுத்தப்பட்டு 25 வருடங்கள் கடந்துவிட்டன. கடந்த காலங்களில் உரிய தீர்வுகள் எவையும் எட்டப்படவில்லை.

இன்று திக்கம் வடிசாலையை மீள இயக்கத் தீர்மானம் எடுக்கப்பட்டிருக்கும் போது அதன் சொத்தாக பழைய போத்தல் மூடிகளும் எஞ்சியுள்ள ஸ்டிக்கர்களும் மாத்திரமே உள்ளன.

அதனை விட கவலைக்குரிய விடயம் என்னவென்றால், கடந்த காலத்தில் முறைகேடான ஒப்பந்தம் ஊடாக பனை அபிவிருத்திச் சபை நிர்வாகத்தால் திக்கம் வடிசாலை தனியாருக்கு தாரை வார்க்கப்பட்டிருந்தது.

சமுதாயத்துக்குக் கிடைக்க வேண்டிய நன்மை அடுத்த சில தசாப்தங்களுக்கு இல்லாமல் செய்யப்பட்டு தனியாருக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்ட பின்னர் பனை அபிவிருத்திச் சபையின் பணிப்பாளர் சபை திக்கம் வடிசாலையை மீளவும் அந்தந்த சங்கங்களுக்கும் தொழிற் துறை சார்ந்தவர்களுக்கும் வழங்குவதென ஒரு தீர்க்கமான முடிவைத் தற்போது எடுத்துள்ளது.

கடந்த 2000 ஆம் ஆண்டு திக்கம் வடிசாலையை இயக்குவது இலகுவாக இருந்தது. ஆனால் இன்று அவ்வாறு இல்லை. பல சவால்கள் உள்ளன. பல சட்டச் சிக்கல்கள் உள்ளன.

திக்கம் வடிசாலையை தனியாருக்கு வழங்கிய ஒப்பந்தத்தில் உள்ள தவறான விடயங்களை அணுகி உரிய ஆலோசனை பெற்று பணிப்பாளர்சபை அந்த ஒப்பந்தத்தை இரத்துச் செய்துள்ளது.

அந்த நல்ல செய்தியை வடமராட்சி பனை தென்னை வள கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணியிடம் தெரியப்படுத்தவே இந்த நடைபயணம் மேற்கொள்ளப்படுகின்றது.

அத்துடன் இன்றைய தலைமுறைக்குத் திக்கம் என்றால் என்னவென்று தெரியாது. மிக முக்கியமாக திக்கம் வடிசாலையை நம்பியுள்ள தொழிலாளர்கள் மீளவும் எழுச்சி பெற வேண்டும் என்ற நோக்கத்துக்காக இந்த வேலைத் திட்டத்தை முன்னெடுக்கின்றோம்.

கடந்த காலத்தில் வடமாகாணத்தின் பிரதான வருவாயை ஈட்டித்தரும் வருமான மார்க்கமாக திக்கம் வடிசாலை இருந்தது.

15ஆயிரம் தொழிலாளர்கள்வரை தொழிலில் ஈடுபட்டனர். இன்று அந்த

தொடர்ச்சி▼

# தனியாருக்கு தாரை வார்த்த திக்கம் வடிசாலையை மீளவும் சங்கங்களிடம் வழங்குவதற்குத் தீர்மானம்

தொடர்ச்சி▲

தொழிலாளர்கள் எண்ணிக்கை லட்சங்களில் இருந்திருக்க வேண்டும். ஆனால் அந்த தொழிலாளர்களுடைய எண்ணிக்கை சில நூற்றுக்கணக்காக சுருங்கிவிட்டமை கவலைக்குரிய விடயம்.

நாம் கடந்த தைப்பூச தினத்தன்று திக்கம் வடிசாலையை மீள திறப்பதாக உறுதியளித்திருந்தோம். இருப்பினும் சில நிர்வாக ரீதியான நடைமுறைகள் மற்றும் சட்டச் சிக்கல் காரணமாக சற்றுத் தாமதமாகியுள்ளது.

மேலும் நாம் சில சட்டரீதியான விடயங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

அதற்கு மக்களுடையதும் கொத்தணிகளுடையதும் ஒத்துழைப்பு நிச்சயமாக இருக்கும் என எதிர்பார்க்கிறேன்.– என்றார்.



# சைவத் தமிழுலகுக்கு சிவனே எண்ணுங்கள் எனக் கூறியவார்தான் வைத்தீஸ்வர ஐயா!

**(காரைநகர் கலாநிதி சிவத்திரு க.வைத்தீஸ்வரக்குருக்கள் திருவடிக்கலப்புற்று பத்தாண்டு நினைவுதினம் இன்றாகும். அதனை முன்னிட்டு இந்தக் கட்டுரை பிரசுரமாகிறது.)**

காரைநகர் வைத்தீஸ்வர ஐயாவின் பெருமைகளைச் சிந்திக்கச் சிந்திக்க அவர் பெருமை ஆழங்காண இயலாமலும், அவரால் விளைந்த பயன்கள் அளவில் அடங்காதனவாகவும் பெருகுகின்றன.

நூற்றொருவர் ஆயிரத்தொருவர் கோடிக்கொருவர் என்று ஔவையார் கணித்த கணக்கிலும் விளங்குகின்றார். அவர் செய்த பணிகள் அவர் அகப்படாது அவரால் விளைந்த நலன்களை யாராலும் வரையறை செய்ய இயலாதுள்ளது.

பிரபலமான பலருமறிந்த அருஞ்செயல்களைப் பட்டியலிட்டு திருப்தியடைந்த பின் சந்திக்கும் ஒருவர், அவரால்தான் மனிதனாக இருக்கிறேன் என்கிறார். இன்னொருவர் என் இட்டல், இடைஞ்சல்களில் எல்லாம் அவரிடம் சென்று ஆறுதல் பெறுவேன். இன்று என்செய்வது என்று தெரியவில்லை என்கிறார். பொருள் தேடுவதிலும் புகழ்தேடுவதிலும் ஊக்கமாக இருந்த என்னை பக்திவழியில் முன்னேறவைத்த ஐயாவைப் போல் உலகில் யாராவது இருக்கமுடியுமோ என்கிறார் வேறொருவர்.

சுமார் எழுபத்தைந்து எண்பது வருடங்களாக காரைநகரிலும் ஈழத்துச் சிதம்பரத்திலும் நிகழ்ந்த கண்ணியமான பெறுமதியான முன்னோடியான கருமங்கள் அனைத்திலும் வைத்தீஸ்வர ஐயாவின் பங்களிப்பு ஊக்குவிப்பு கணிசமான அளவு அடிப்படையான தன்மை தெளிவாகத் தெரிகிறது.

தேவாமிர்தத்தை மட்டுமன்றி கற்பகம் காமதேனு உச்சைசிரவம் ஐராவதம் மகாலக்குமி முதலிய பல தேவச்செல்வங்களை உதவிய பின்னும் காத்தல் கடவுளான திருமால் பள்ளிகொள்ளும் புனிதம்மிக்கதாகப் பாற்கடல் விளங்குவது போல் வைதீஸ்வர ஐயா விளங்குகிறார் என்று சொல்லத் துணியலாம் போல அவரது தன்மையுள்ளது.

பாற்கடல் உதவிய பல தெய்வீகச் செல்வங்களுள் முதன்மையானதாக தேவாமிர்தம் விளங்குவது போல் வைதீஸ்வர ஐயா தோற்றுவித்த மணிவாசகர்சபை விளங்குகின்றது. காரை வளர்ச்சிக்கழகம் ஈழத்துச் சிதம்பர புராணம் முதலியவை கற்பகதரு காமதேனு முதலியனபோல கொண்டாடத் தக்கனவாயுள்ளன பாற்கடலில் உள்ள அலையும் துளியும்போல அவரது பிறபணிகள் கணக்கின்றி உள்ளன.

மணிவாசகர் சபையின் சேவைகளால் ஈழத்துச் சிதம்பரத்துக்கும் காரைநகருக்கும் அப்பாலும் திருவாசகம் தேனாகச் சுவைக்கும் நிலை உருவாகி உள்ளது எனலாம். மணிவாசகர் சபை ஆரம்பித்து பலன் செய்தன் விளைவாகவே காரைநகர் பண்டிதமணி அருளம் பலவாணர் திருவாசகத்துக்கு அரிய உரை ஒன்றை எழுதி வெளிப்படுத்தியிருக்கிறார். காலத்துக் காலம் மணிவிழா மலர்கள் பல மலர்ந்து மணம் பரப்பிலிருக்கின்றன.

திருவெம்பாவை விழாக்காலத்தில் காரைநகர் சிவன் கோவிலில் நிகழும் மணிவாசகர் விழா, திருவிழாவின் சிறப்பம்சமாக விளங்கியது மட்டுமன்றி காரைநகர் சிவன் கோவிலை ஈழத்துச் சிதம்பரம் என பிரகாசிக்கக் காரணமாக இருந்திருக்கிறது எனக் கருதக்கூடியதாக உள்ளது.

காரைநகரும் வைத்தீஸ்வர ஐயாவும் செய்த தவப் பயனாக மணிவாசகர் சபைக்கு யோகர் சுவாமிகளின் ஆசியை நாடும் சந்தரப்பத்தை உண்டாக்கியிருக்கின்றன. யோகர் சுவாமிகள் மணிவாசகர் சபைக்கு ஆசிவழங்கும்போது வேண்டத்தக்கது அறிவோய் நீ எனத் தொடங்கும் திருவாசகத்தைப்பாடி வாழ்த்தி ஆசி



கூறியிருக்கின்றார்.

திருவாசகத்தில் அதிக ஈடுபாடிவில்லாதவரும் நன்கு அறிந்த பிரபலமான திருவாசகப்பாடலே வேண்டத்தக்கது எனத் தொடங்கும் பாடலாகும். இப்பாடலின் நாலாவது அடியாகிய வேண்டும் பரிசு ஒன்று உண்டு என்னில் அதுவும் உன்றன் விருப்பு அன்றே என்பது பலரும் பெரும்பாலானவரும் நான் விரும்பும் விருப்பங்கள் எல்லாம் விருப்பத்தால் எனக்கு உண்டான விருப்பங்களே என்று கருதி தமது ஆசைகளுக்கெல்லாம் சிவபெருமானே பொறுப்பானவர் என நம்பி ஆறுதலும் வலிமையும் அடைகின்றனர். ஆனால் இவர்கள் நம்புவதற்கு மாறாக இத்திருவாசகப் பகுதிக்கு மாணிக்கம் போன்ற அரிய நுண்ணிய கருத்து உள்ளது.

சிவபெருமானே நான் விரும்பும் விருப்பங்கள் எல்லாம் உன் விருப்பத்தாலேயே எனக்கு உண்டாகியிருக்கின்றன என்ற கருத்து இத்திருவாசகப் பாடலின் மூன்றாவது அடியாகிய “வேண்டி நீ யாது அருள் செய்தாய் யானும் அதுவே வேண்டின் அல்லால்” பகுதியிலேயே அடங்கி விடுகின்றது.

வேண்டும் பரிசு ஒன்று உண்டு என்னில் அதுவும் உன்றன் விருப்பு அன்றே என்பதற்கு பெருமானே நான் நானாகவிருப்பது என்னவென்றால் உன்னை விரும்புதல் ஒன்றே. யாம் சிவகதி அடையும் ஒன்றையே நான் விரும்புகின்றேன்.

இப்படி இப்பகுதியை அழுத்தமாக சிந்திக்க ஒரு காரணம் உண்டு. மணிவாசகர் சபையைத் தோற்றுவித்து பலரையும் திருவாசகத்தில் ஈடுபடுத்தி மகிழ்தலோடு நின்றுவிடாது தான் முற்றுமுழுதாக திருவாசகத்தில் ஈடுபட்டு திருவாசகத்தைச் சுவைத்தவர் ஐயா அவர்கள்.

முதுமை காரணமாக சோர்வும், செயற்பாட்டுத் தளர்வும் அவரைப் பிற விடயங்களிலிருந்து விலக்கி திருவாசகபாராயணம் திருவாசக சிந்தனை என்பவற்றிலே தோயச் செய்ததை அறிய முடிகின்றது.

தனது இருபத்திநாலு வயசிலேயே திருவாசகத்தில் ஈடுபட்ட ஐயா, அத்திருவாசக ஈடுபாட்டைப் பிறருக்கு உண்டாக்கி சபையைத் தோற்றுவித்திருக்கிறார். பிறருடன் சேர்ந்தும் தனித்தும் திருவாசகத்திலே திளைத்திருக்கிறார். மனம், வாக்கு, காயம் என்னும் முக்கரணங்களுக்கும் அப்பால் தன் உயிர் நிலையிலேயே இவர் திருவாசகம்

தொடர்ச்சி▼

# சைவத் தமிழுலகுக்கு சிவனே எண்ணுங்கள் எனக் கூறியவார்தான் வைத்தீஸ்வர ஐயா!

தொடர்ச்சி▲

யமாக விளங்கியிருக்கிறார் என்ற உண்மையை இவர் தன் வாழ்வின் கடைசி நேரத்தில் தன் மகளை நோக்கி ஐயோ ஐயோ என்று கூறாதே சிவனே சிவனே என்று கூறு என்று கூறியதனால் அறிய முடிகின்றது, தெளிய முடிகின்றது. அரகரா சிவசிவா என்று கூறு. சிவனே சிவனே என்று கூறு என்றமை திருவெம்பாவையில் உள்ள சிவனே சிவனே என்று ஓலமிடினும் உணராய் உணராய் காண் என்ற மாணிக்கவாசகத்தை முன்னிலைப்படுத்துகின்றது. இந்த நிகழ்வைப் பற்றி நுணுகி ஆராய்ந்தால் ஒரு உண்மை வெளிப்படும்.

தன் திருமணத்துக்கு வந்தவர்களுடன் தானும் சிவச்சோதியில் பிரவேசிக்க அமைந்த சந்தர்ப்பத்தில் தான் இவ்வுலகைவிட்டு சிவச்சோதியில் கலந்தபின் இவ்வுலக தேவ உலக மக்களுக்கு வேண்டிய உறுதி மொழியைச் சம்பந்த சுவாமிகள் வழங்கிய தன்மையில் திருஞானசம்பந்தர் காதலாகி என்னும் பதிகத்தைப் பாடினார் என்று சேக்கிழார் பாடுகிறார்.

இந்தச் சேக்கிழார் பாணியில் வைத்தீஸ்வர ஐயா தன் மகளை முன்னிட்டுத் தனக்கு முன்னுள்ள சைவத் தமிழ் உலகத்தைப் பார்த்து ஐயோ! ஐயோ! என்னாதீர்கள் சிவனே சிவனே எண்ணுங்கள் என்று சைவத் தமிழுலகுக்கான இறுதி உறுதி மொழியாகச் சிவனே சிவனே எண்ணுங்கள் எனக்கூறிச் சிவபதமடைந்தார் எனக் கொள்வதே முறை. வைத்தீஸ்வர ஐயாவைப் போலவே வேறு பல பெரியோர்களும் தம் கடைசி வார்த்தையாக நிலையான கருத்தை வழங்கிச் சென்றிருக்கிறார்கள்.

சம்பந்தர் காதலாகி பதிகத்தை வழங்கினார். வேறு ஒரு மகான் சுயநலமுள்ளவனாக இராதே என்றிருக்கிறார். வேறு ஓர் அரசியல் தலைவர் நீ என்ன செய்கிறாய் என்றிருக்கிறார். இப்படியானவர்கள் வரிசையில் ஐயா எங்களுக்கு வழங்கிய மாணிக்கவாசகம் பாற்கடலின் தேவாமிர்தத்திலும் மேலானது எனத் துணியலாம்.

**பண்டிதர் தி .பொன்னம்பலவாணர்,**
**பொன்னாலை.**






# ஈழமக்கள் ஜனநாயகக் கட்சிக்கே யாழ். மாநகர சபையில் ஆதரவு

## தொழிலதிபர் ஞானப்பிரகாசம் சுலக்சன் அறிவிப்பு

(எஸ். நிதர்ஷன்)

யாழ்ப்பாண மாநகர சபையில் , ஈழமக்கள் ஜனநாயக கட்சிக்கே தமது சுயேச்சை குழு ஆதரவு அளித்துள்ளது என்று தொழிலதிபர் ஞானப்பிரகாசம் சுலக்சன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள செய்தி குறிப்பில்,

நடைபெறவுள்ள உள்ளூராட்சி தேர்தலில் எனது தலைமையில் யாழ்ப்பாண மாநகர சபையில் சுயேச்சை குழுவாக வேட்பு மனு தாக்கல் செய்திருந்தோம்.

எமது பெண் வேட்பாளர் ஒருவரின் சத்திய கூற்றில் சிறு தவறு காணப்பட்ட நிலையில் , எமது வேட்பு மனு நிராகரிக்கப்பட்டது. எமது வேட்பு மனுவை ஏற்றுக்கொள்ள வேண்டும் எனக் கோரி நாம் உயர் நீதிமன்றில் மனு தாக்கல் செய்தோம். உயர் நீதிமன்றம் எமது மனுவை நிராகரித்தது.

அதேவேளை எமது தவறை ஒத்த தவறுகள் காணப்பட்ட வேறு கட்சிகள், சுயேச்சை குழுக்களின் வேட்பு மனுக்களை மேல் முறையீட்டு நீதிமன்றம் ஏற்றுக்கொள்ளுமாறு தேர்தல் திணைக்களத்துக்குக் கட்டளையிட்டு இருந்தது.

ஒரு நீதிமன்றில் எமது தவறை ஒத்த தவறு விட்டவர்களை ஏற்றுக்கொள்ளுமாறு கட்டளையிடப்பட்டதால் , எமது வேட்பு மனுக்களும் ஏற்றுக்கொள்ளப்படும் என்ற நம்பிக்கையில் தேர்தல் ஆணைக்குழுவிடம் எமது வேட்பு மனுக்களை ஏற்றுக்கொள்ளுமாறு கோரிக்கை விடுத்தோம்.

ஆனால் தேர்தல் ஆணைக்குழு நீதிமன்ற கட்டளை உள்ளவர்களின் மனுக்களை மட்டுமே ஏற்றுக்கொள்வோம் என கூறியமையால் நாமும் கடந்த 15 ஆம் திகதி மேல் முறையீட்டு நீதிமன்றில் மனு தாக்கல் செய்தோம். எமது மனு மீதான விசாரணை 21 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என மன்று திகதியிட்டு இருந்தது.

மிகுந்த நம்பிக்கையுடன் நாம் காத்திருந்த போது , கடந்த 21 ஆம் திகதி மனு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, கால தாமதம் என தேர்தல் திணைக்களம் தமது பூர்வாங்க ஆட்சேபனையை தெரிவித்ததமையால், மேல் முறையீட்டு நீதிமன்றம் எமது மனுவை தள்ளுபடி செய்தது.

எமக்கு சாதகமாக தீர்ப்பு வரும் என மிகுந்த எதிர்பார்ப்புடன் காத்திருந்த எமக்கு மனு தள்ளுபடி செய்யப்பட்டமை பேரதிர்ச்சியைத் தந்தது.

இந்த நிலையில் எமது சுயேச்சை குழு யாருக்கு ஆதரவு வழங்குவது என்பது தொடர்பில் ஆழமாக சிந்தித்து, கடந்த காலங்களில் பல அபிவிருத்தி திட்டங்களை எமது பிரதேசத்துக்கும் எமது மக்களுக்கும் செய்த தோழர் டக்ளஸ் தேவானந்தாவின் கரங்களை பலப்படுத்துவோம் எனும் தீர்மானத்துக்கு வந்து எமது ஆதரவை ஈழமக்கள் ஜனநாயக கட்சிக்கு வழங்குவது என தீர்மானித்துள்ளோம்.

எனவே இம்முறை யாழ். மாநகர சபை தேர்தலில் வீணை சின்னத்துக்கு எமது மக்கள் வாக்களிக்க வேண்டும் என்று அன்புரிமையுடன் கேட்டுக்கொள்கிறோம்.- என்றுள்ளது.

# கல்முனை மாநகர சபையில் தபால் மூல வாக்களிப்பு இன்று

(அஸ்லம் எஸ்.மௌலானா)

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு இன்று வெள்ளிக்கிழமை (25) கல்முனை மாநகர சபையில் நடைபெற்றது.

இதன்போது கல்முனை மாநகர சபை எல்லைக்கு அப்பாற்பட்ட சில உள்ளூராட்சி மன்றங்களை வசிப்பிடமாக கொண்ட உத்தியோகத்தர்கள் பலர் தமது வாக்குகளை பதிவு செய்து கொண்டனர்.

கல்முனை மாநகர சபையின் உதவி ஆணையாளரான ஏ.எஸ்.எம். அஸீம் வாக்களிப்பு அத்தாட்சிப்படுத்தும் அலுவலராக கடமையாற்றினார்.

இதன்போது உதவித் தெரிவத்தாட்சி உத்தியோகத்தர் மற்றும் கண்காணிப்பு உத்தியோகத்தர்களும் சமுக



மளித்திருந்தனர்.

கல்முனை மாநகர சபைக்கு உட்பட்ட சாய்ந்தமருது பிரதேசத்துக்கு தனியான நகர சபையை ஸ்தாபிக்குமாறு கோரி நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் கல்முனை மாநகர சபைக்கு மாத்திரம் தேர்தல் நடைபெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.



# 5 ஆயிரம் வெசாக் கூடுகளை நுவரெலியாவில் தயாரிக்கத் திட்டம்

(தலவாக்கலை பி.கேதீஸ்)

இந்த ஆண்டு நுவரெலியாவில் நடைபெறும் தேசிய வெசாக் பண்டிகையின் போது, சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் பாடசாலை மாணவர்களால் 5,000 வெசாக் கூடுகள் தயாரிக்கப்பட்டு அவற்றை வீதிகளில் காட்சிபடுத்தி ஒளிரச் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது என்று நுவரெலியா மாவட்ட செயலாளர் துஷாரி தென்னகோன் தெரிவித்தார்.

தேசிய வெசாக் விழாவை நடத்துவது தொடர்பாக அரச அதிகாரிகள் மற்றும் பிறருக்குத் தெரிவிக்கும் வகையில் நுவரெலியாவிலுள்ள சர்வதேச பௌத்த மையத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் மாவட்டச் செயலாளர் இவ்வாறு தெரிவித்தார்.

நுவரெலியா கல்வி வலயத்திலுள்ள 154 பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள் வெசாக் கூடுகளை தயாரித்து விநியோகிக்கும் திட்டத்தில் பங்கேற்று வருகின்றனர். இந்த ஆண்டு தேசிய வெசாக் விழா மே 10 ஆம் திகதி முதல் 16 ஆம் திகதிவரை ஒரு வாரத்துக்கு நுவரெலியாவில் "பஜேத மித்தே கல்யாணே" (நண்பர்களின் துணையுடன் நண்பர்கள்) என்ற கருப்பொருளை அடிப்படையாகக் கொண்டு நடத்த திட்டமிடப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார்.





பிரதான விழா மே 10 ஆம் திகதி நுவரெலியா சர்வதேச பௌத்த மையம் மற்றும் நுவரெலியா நகர மண்டபத்தை மையமாகக் கொண்டு நடைபெறும். இந்த ஆண்டு தேசிய வெசாக் விழா முழு நுவரெலியா மாவட்டத்தையும் உள்ளடக்கி நடத்த திட்டமிடப்பட்டுள்ளது என்று நுவரெலியா மாவட்ட செயலாளர் துஷாரி தென்னகோன் மேலும் தெரிவித்தார்.

சர்வதேச பௌத்த மையத்தின் பிரதம விகாராதிபதி வணக்கத்துக்குரிய கிரியோருவே திரானந்த தேரர், நுவரெலியா மாநகர ஆணையாளர் ஈ.எம். பண்டார, மேலதிக மாவட்ட செயலாளர் (காணி) ஷாலிகா லிண்டகும்புர, மேலதிக மாவட்ட செயலாளர் (நிர்வாகம்) தினிகா கவிசேகர, நுவரெலியா பிரதேச செயலாளர் பிரகீத் தனன்சூரிய மற்றும் அரச அதிகாரிகள் பலர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.



# வத்திக்கானின் பாப்பரசர் பிரன்ஸிஸ் மறைவு உலகுக்கு ஈடுசெய்ய முடியாத பாரிய இழப்பு!

## இரங்கல் செய்தியில் இலங்கை சர்வமதத் தலைவர்கள் தெரிவிப்பு

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

சமய சகவாழ்வு மற்றும் சர்வதேச ஒற்றுமையை மதிக்கும் சமயத் தலைவராக உலகில் சமயங்களின் மற்றும் சர்வதேச ஒற்றுமையைக் கட்டியெழுப்புவதில் ஆற்றிய சேவைகளைப் பாராட்டும் அதேவேளை, பாப்பரசர் பிரன்ஸிஸ் அமைதியை வலுப்படுத்த பல்வேறு வழிகளில் செயற்பட்டவர் என்று இலங்கை சர்வமதத் தலைவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளனர்.

பௌத்த, ஹிந்து, இஸ்லாம் மற்றும் கிறிஸ்தவ சர்வமதத் தலைவர்களான சாஸ்த்ரபதி கலாநிதி கலகம தம்மரன்சி நாயக்க தேரர், கலாநிதி சிவஸ்ரீ பாபு சர்மா குருக்கள், அல்-ஹாஜ் அஷ்-ஸெய்யித் கலாநிதி ஹசன் மௌலானா அல்-காதிரி மற்றும் கலாநிதி நிஷான் சம்பத் குரே பாதிரியார் ஆகியோர் வத்திக்கானின் பாப்பரசரின் மறைவுக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துள்ளனர்.

அந்த இரங்கல் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வத்திக்கானின் பாப்பரசராக அவர், சர்வதேச ஒற்றுமை மற்றும் மத நல்லிணக்கத்தை மேம்படுத்துவதில், வத்திக்கானுக்கும் முழு உலகுக்கும் பெரும் சேவை செய்துள்ளார்.

அவருடைய மகிமையான செயல்களில், இயேசுவின் மாபெரும் வழிகாட்டலை நாம் காண்கிறோம். மேலும், கிறிஸ்தவ மதப் பெரியார் என்ற வகையில், இன அமைதி மற்றும் சர்வதேச ஒற்றுமைக்காக வேண்டிய பல பிரச்சினைகளை தீர்த்து வைத்துள்ளார்.

மதிப்புக்குரிய பாப்பரசர் பிரன்ஸிஸின் மறைவு உலகுக்குப் பெரும் இழப்பாகும். இலங்கையின் பௌத்த, இந்து, இஸ்லாம் மற்றும் கிறிஸ்தவ மக்களுக்கும், வத்திக்கான் மற்றும் உலக அமைதியை மதிக்கும் அனைத்து உலக மக்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.- என்றுள்ளது.







# இந்தியா - பாகிஸ்தான் இடையே எல்லையில் துப்பாக்கிச் சண்டை

பஹல்காம் பயங்கரவாத தாக்குதல் சம்பவத்தை அடுத்து ஏற்பட்டுள்ள அசாதாரண சூழலுக்கு மத்தியில் இந்திய - பாகிஸ்தான் எல்லைப் பகுதியில் இரு நாட்டு இராணுவத்துக்கு இடையே துப்பாக்கிச் சண்டை நடந்து வருவதாக தகவல் வெளியாகி உள்ளது.

காஷ்மீரின் பஹல்காம் மலைப் பகுதியில் உள்ள பைசரன் பள்ளத்தாக்கு பகுதியில் சுற்றுலா பயணிகள் மீது தீவிரவாதிகள் கடந்த 22 ஆம் திகதி தாக்குதல் நடத்தினர். இதில் வெளிநாட்டினர் உட்பட 26 பேர் உயிரிழந்தனர். இந்த தாக்குதலுக்கு லஷ்கர்-இ-தொய்பா ஆதரவு அமைப்பான டி.ஆர்.எப். பொறுப்பேற்றது. தாக்குதல் நடத்திய தீவிரவாதிகளில் 2 பேர் பாகிஸ்தானை சேர்ந்தவர்கள் என தெரியவந்துள்ளது.

இந்த சம்பவத்தை அடுத்து இந்தியா - பாகிஸ்தான் இரு தரப்பிலும் பரஸ்பரம் பல்வேறு தடைகள் விதிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக, பாகிஸ்தானுக்கு சிந்து நதி நீரை வழங்கும் ஒப்பந்தம் நிறுத்திவைக்கப்படுவதாக இந்தியா அறிவித்துள்ளது. இது தொடர்பாக இந்திய நீர்வளத்துறை செயலாளர் தேபாஸ்ரீ முகர்ஜி, பாகிஸ்தானின் நீர்வளத்துறை செயலாளர் சையத் அலி முர்தாசாவுக்கு எழுதிய கடிதத்தில், ஒப்பந்தத்தின் நிபந்தனைகளை மீறியதால் சிந்து நதி நீர் ஒப்பந்தம் உடனடியாக நிறுத்தி வைக்கப்படுகிறது.

ஜம்மு காஷ்மீரை குறிவைத்து பாகிஸ்தானால் தொடர்ந்து நடத்தப்படும் எல்லை தாண்டிய பயங்கரவாதம், சிந்து நதி நீர் ஒப்பந்தத்தின் கீழ் இந்தியாவின் உரிமைகளைத் தடுக்கிறது. நல்ல நம்பிக்கையுடன் ஒரு ஒப்பந்தத்தை மதிக்க வேண்டிய கடமை ஒரு ஒப்பந்தத்திற்கு அடிப்படையானது. அதற்கு பதிலாக நாங்கள் கண்டது இந்திய யூனியன் பிரதேசமான ஜம்மு காஷ்மீரை குறிவைத்து பாகிஸ்தானால் தொடர்ந்து நடத்தப்படும் எல்லை தாண்டிய பயங்கரவாதம்தான் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, இடம்பெயர்ந்த காஷ்மீர் பண்டிதர்களுக்கான அமைப்பான பனுன் காஷ்மீர், காஷ்மீருக்கான பயண ஆலோசனையை மத்திய அரசு உடனடியாக வெளியிட வேண்டும். பள்ளத்தாக்கில் நிலைமை "இயல்பிலிருந்து வெகு தொலைவில்" உள்ளது. சுற்றுலாப் பயணிகள், குறிப்பாக இந்துக்கள் கடுமையான அச்சுறுத்தலை எதிர்கொள்கிறார்கள் என்று தெரிவித்துள்ளது.

இந்த பின்னணியில், காஷ்மீர் பள்ளத்தாக்கில் பாதுகாப்பு நிலைமையை இராணுவத் தளபதி ஜெனரல் உபேந்திர திவேதி இன்று ஆய்வு செய்ய உள்ளார். இதற்காக அவர் ஸ்ரீநகர் மற்றும் உதம்பூருக்குச் செல்வார் என்றும், காஷ்மீர் பள்ளத்தாக்கில் நிறுத்தப்பட்டுள்ள மூத்த இராணுவத் தளபதிகள் மற்றும் பிற பாதுகாப்பு நிறுவனங்களின் அதிகாரிகளை அவர் சந்திக்க உள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

26 உயிர்களைப் பலிகொண்ட பஹல்காம் பயங்கரவாதத் தாக்குதலுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் வணிகர்கள் முழு அடைப்பு போராட்டத்திற்கு அழைப்பு விடுத்துள்ளதால் டில்லியின் சாந்தினி சவுக்கில் உள்ள சந்தைகள் மூடப்பட்டுள்ளன.

# சிந்துநதி ஒப்பந்தம் நிறுத்தி வைப்பு தொடர்பாக ஜல்சக்தி அமைச்சருடன் அமித் ஷா சந்திப்பு

சிந்து நதிநீர் ஒப்பந்தம் நிறுத்தி வைப்பு தொடர்பாக மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா இன்று மாலை தனது இல்லத்தில் ஒரு முக்கிய கூட்டத்தை நடத்த இருக்கிறார். இந்த கூட்டத்தில் மத்திய ஜல்சக்தி துறை அமைச்சர் சி.ஆர். பாட்டீல் மற்றும் மூத்த அரசு அதிகாரிகள் கலந்து கொள்ள இருக்கிறார்கள்.

இதனிடையே சிந்து நதி நீர் ஒப்பந்தத்தை நிறுத்தி வைப்பது தொடர்பாக பாகிஸ்தானுக்கு எழுத்துப்பூர்வமாக தெரிவிக்கப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது.

இந்திய ஜல்சக்தி அமைச்சகத்தின் செயலாளர் தேவஸ்ரீ முகர்ஜீ, இந்திய அரசின் முடிவு குறித்து பாகிஸ்தான் நீர்வளத்துறை அமைச்சகத்தின் செயலாளர் சைது அலி முர்தாஷாவுக்கு கடிதம் மூலம் தெரிவித்துள்ளார். இருநாடுகளுக்கு இடையேயான ஒப்பந்தத்தில் மாற்றங்களுக்கான அறிவிப்பை இந்தியா தெரிவித்துள்ளது. ஒப்பந்தத்தில் மாற்றங்கள் செய்யுமாறு பாகிஸ்தான் அரசுக்கு நோட்டீஸ் அளித்துள்ளதாக கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.



பஹல்காம் தாக்குதலுக்கு பதிலடி கொடுக்கும் விதமாக பாகிஸ்தானுடனான சிந்து நதிநீர் ஒப்பந்தத்தை நிறுத்தி வைக்க இந்திய அரசு அறிவித்ததைத் தொடர்ந்து, பிரதமரின் உத்தரவு படி, ஜல்சக்தி துறை செயலாளர் சி.ஆர். பாட்டீல் தலைமையில் பல்வேறு கூட்டங்கள் நடந்தன.

கடந்த புதன்கிழமை பிரதமர் மோடி தலைமையில், உள்துறை அமைச்சர் அமித் ஷா, பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங், வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் ஆகியோர் கலந்து கொண்ட பாதுகாப்பு அமைச்சரவைக் குழு கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் 9 ஆண்டுகளாக நடந்த பேச்சுவார்த்தையின் அடிப்படையில் உலக வங்கியின் உதவியுடன் கடந்த 1960 ஆம் ஆண்டு சிந்து நதிநீர் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இது, சிந்து, ஜீலம், செனாப், ரவி, பியாஸ் மற்றும் சட்லஜ் ஆகிய ஆறு நதிகளின் நீரை இந்தியா - பாகிஸ்தான் இடையே பகிர்ந்து கொள்வது பற்றியது. இந்த ஒப்பந்தத்தின் படி, மேற்கு பகுதி நதிகளை (சிந்து, ஜீலம், செனாப்) பாகிஸ்தானும், கிழக்கு பகுதி நிதிகளை (ரவி, பியாஸ், சட்லஜ்) இந்தியாவும் பகிர்ந்து கொள்கின்றன.




# போப் பிரான்சிஸின் தேகம் வைக்கப்பட்டுள்ள பேழை இன்று மூடப்பட்டு முத்திரையிடப்படும்



நித்திய இளைப்பாறிய பரிசுத்த திருத்தந்தை பிரான்சிஸின் தேகம் வைக்கப்பட்டுள்ள திருவுடல் பேழை, இன்று மூடப்பட்டு முத்திரையிடப்படும் என வத்திக்கான் திரு அவை அறிவித்துள்ளது.

வத்திக்கான் திருஅவையின் தலைவராக செயற்படுகின்ற கர்தினால் கெவின் ஃபாரல் தலைமையில் இன்று மாலை இந்த நிகழ்ச்சி நடைபெறும்.

இதில் நூற்றுக்கணக்கான கர்தினால்களும், புனிதத்துவம் பெற்ற அதிகாரிகளும் கலந்து கொள்வார்கள் என்று வத்திக்கான் திருச்சபை அறிவித்துள்ளது.


இதன்படி தற்போது புனித பேதுரு பசிலிக்காவில் வைக்கப்பட்டுள்ள திருத்தந்தையின் திருவுடலுக்கு பொதுமக்கள் அஞ்சலி செலுத்த அனுமதிக்கப்பட்ட காலம் நிறைவுக்கு வருகிறது. நாளையதினம் அவரது இறுதி நல்லடக்க ஆராதனை நடைபெறவுள்ளது.

இதுவரையில் இலட்சக்கணக்கான மக்கள் திருத்தந்தை பிரான்சிஸின் திருவுடலுக்கு அஞ்சலி செலுத்தியுள்ளனர்.

திருத்தந்தை பிரான்சிஸின் இறுதி நல்லடக்க ஆராதனையை முன்னிட்டு, இலங்கையில் நாளை தேசிய துக்க தினமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இந்தியாவும் பாகிஸ்தானும் அதிகபட்ச நிதானத்தைக் கடைப்பிடிக்க வேண்டும்

## ஐக்கிய நாடுகள் சபை வலியுறுத்தல்



இந்தியா மற்றும் பாகிஸ்தான் அரசாங்கங்கள், அதிகபட்ச நிதானத்தைக் கடைப்பிடிக்க வேண்டும் என ஐக்கிய நாடுகள் சபை வலியுறுத்தியுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர், தற்போது இரு நாடுகளுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள நிலைமையை மிகுந்த அக்கறையுடன் கண்காணித்து வருவதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

ஏப்ரல் 22 ஆம் திகதி ஜம்மு-காஷ்மீரில் நடந்த பயங்கரவாதத் தாக்குதலுக்கு ஐக்கிய நாடுகள் சபை கண்டனம் வெளியிட்டதை மீண்டும் நினைவூட்டியது.

இந்நிலையில் நிலைமை மேலும் மோசமடையாமல் இருக்க பாகிஸ்தான் அரசாங்கத்துக்கும் இந்திய அரசாங்கத்துக்கும் தாம் கோரிக்கை விடுப்பதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

பாகிஸ்தானுக்கும் இந்தியாவிற்கும் இடையிலான எந்தவொரு பிரச்சினையும், அர்த்தமுள்ள, பரஸ்பர ஈடுபாட்டின் மூலம் அமைதியாகத் தீர்க்க முடியும் என்றும், தீர்க்கப்பட வேண்டும் என்றும் ஐக்கிய நாடுகள் சபை வலியுறுத்தியுள்ளது.





# உக்ரைன் மீதான தாக்குதல்களை நிறுத்த வேண்டும்; ட்ரம்ப் தெரிவிப்பு

உக்ரைன் மீதான தாக்குதல்களை ரஷ்ய ஜனாதிபதி நிறுத்திக்கொள்ள வேண்டும் என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டினுக்கு எச்சரிக்கை விடுக்கும் வகையில் அமெரிக்க ஜனாதிபதி தமது Truth சமூக வலைத்தளத்தில் பதிவிட்டுள்ளார்.

உக்ரைன் மீதான தாக்குதல்கள் மகிழ்ச்சிக்குரிய விடயமல்ல எனவும் ரஷ்ய - உக்ரைன் போரை நிறுத்துவதற்கு 2 நாடுகளுக்கும் அழுத்தம் விடுப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

ரஷ்யாவினால் உக்ரைன் தலைநகர் மீது நேற்று நடத்தப்பட்ட வான்வழித் தாக்குதல்களில் 12 பேர் உயிரிழந்தனர்.

கனடா முரசு
வெள்ளிக்கிழமை 25/04/2025

## 100 கிலோ கொக்கெயின் போதைப் பொருள் மீட்பு

டொராண்டோவில் சுமார் 100 கிலோ கிராம் எடையுடைய கொக்கெயின் போதைப் பொருள் மீட்கப்பட்டுள்ளது.

டொராண்டோ பெரும்பாகம், நயாகரா மற்றும் 02




# அமெரிக்காவிற்கு ஆள்கடத்தலில் ஈடுபட்ட இந்தியருக்கு தண்டனை

**கனடாவிலிருந்து சட்டவிரோதமான முறையில் அமெரிக்காவிற்கு ஆள்கடத்தலில் ஈடுபட்ட இந்தியப் பிரஜை ஒருவருக்கு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.**

**அமெரிக்காவின் வொஷிங்டன் மாநிலத்தில், கனடாவுடனான எல் லையை கடந்து இந்திய குடிமக்களை சட்டவிரோதமாக நுழைய உதவிய தாக 27 வயதான இந்தியரான ரஜத் ரஜத் என்பவருக்கு ஐந்து மாதங்கள் சிறைத் தண்டனை விதிக்கப்பட் டுள்ளது.**

அமெரிக்க நீதிமன்றினால் இந்த தண்டனை விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

2023 நவம்பர் 27ஆம் திகதி, கனடாவின் பீஸ் ஆர்ச் எல்லைக்கு அருகிலுள்ள எல்லைக் கிராம குடியிருப்பு பகுதியில் இருந்து அமெரிக்காவிற்கு ஆட்கள் கடத்தப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது.

ரஜத் அவர்களுக்கு எல்லையை எவ்வாறு கடக்கலாம் என வழிகாட்டி, பணம் வசூலித்து, மினிவேன் ஓட்டுநருக்கு பணம் கொடுத்து ஏற்பாடு செய்தார் என கைதானவர்கள் வாக்கு மூலம் வழங்கியுள்ளனர்.

ரஜத் என்பவர் இந்தியர்கள் கனடிய - அமெரிக்க எல்லைப் பகுதியை எவ் வாறு கடப்பது என்பது குறித்து பல இந்தியவர்களுக்கு வழிகாட்டினார் என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

# ரயில் மோதி ஒருவர் பலி




ஒன்றாரியோ பிரைட்டனில் ரயில் மோதி ஒருவர் உயிரிழந்துள்ளார் என மாகாண பொலிஸ் தெரிவித்துள்ளது.

மொன்க் வீதிக்கு அருகிலுள்ள ஒன்டாரியோ வீதியில் பாதசாரி யொருவர் ரயிலில் மோதுண்டுள்ளார் என தகவல் கிடைக்கப் பெற்றதாக ஒன்டாரியோ மாகாண பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பொலிஸார் விரைந்து சம்பவ இடத்திற்கு சென்ற போது, பாதசாரி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விபத்தின் காரணங்கள் இதுவரை தெளிவாகவில்லை என்றும் பொலிஸ் தெரிவித்துள்ளது. விபத்து தொடர்பான விசாரணையின்போது, மொன்க் வீதியிலிருந்து பட்டலர் வீதிவரை ஒன்டாரியோ வீதி மூடப்பட்டது.

சுமார் மூன்று மணிநேர விசாரணைக்குப் பிறகு, வீதி 5 மணிக்கு சாலை மீண்டும் திறக்கப்பட்டது.

விபத்தில் உயிரிழந்தவரின் அடையாளம் மற்றும் மேலதிக விவரங்கள் அதிகாரப்பூர்வமாக இதுவரை வெளியிடப்படவில்லை.



# உலகில் அதிக மன அழுத்தத்துக்கு உள்ளாகும் தொழிலாளர்களில் கனடியர்கள் முன்னிலை

உலகிலேயே மிக அதிக மன அழுத்தத்துக்கு உள்ளாகும் தொழிலாளர்களில் கனடியர்கள் முன்னிலையில் உள்ளனர் என ஆய்வு ஒன்றில் அதிர்ச்சித் தகவல் வெளியாகியுள்ளது.

இந்த விடயம் 2024 ஆம் ஆண்டிற்கான ஸ்டேட் ஒப் க்லோபல் வேர்க்பிளேஸ் "State of the Global Workplace" அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த ஆய்வின் போது, 58 வீத கனடியர்கள் நாளில் பெரும் பகுதி நேரம் மன அழுத்தம் உணர்கிறோம் என பதிலளித்துள்ளனர். இது உலக சராசரி அளவை விட 18 சதவீத புள்ளிகள் அதிகம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதில் கனடியர்கள் வாழ்க்கையில் பெற்ற மதிப்பீடுகள் சராசரியை விட அதிகமாக இருந்தாலும், ஒவ்வொரு நாளும் அதிகமான மன அழுத்தம் அனுபவிப்பதாக கூறியவர்களின் விகிதம் மிக உயர்வாக காணப்படு வதாக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆய்வில் பங்கேற்ற 50 வீதமானோர் வேறு வேலை வாய்ப்புக்காக தேடிக் கொண்டிருக்கிறார்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.



## 100 கிலோ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நோவா ஸ்கோஷியா பகுதிகளில் பல மாதங்கள் நடைபெற்ற விசாரணையின் பின் 100 கிலோகிராம் மேலான கொக்கெயின் மற்றும் 2.15 லட்சம் டொலர் பணம் கைப்பற்றப்பட்டுள்ளன என ஒன்டாரியோ மாகாண பொலிஸ் தெரிவித்துள்ளது.

ஏப்ரல் 4 ஆம் திகதி, ரிச்ச்மண்ட் ஹில்லில் உள்ள ஒரு வீட்டில் சுற்றிவளைப்பு நடத்தப்பட்டபோது, சுமார் 101 கிலோ கிராம் கொக்கெயின் மற்றும் 2.15 லட்சம் டொலர் பணம் பறிமுதல் செய்யப்பட்டது.

இதையடுத்து, இந்த சம்பவத்துடன் தொடர்புடைய கும்பலின் முழு உறுப்பினர் ஒருவர் உட்பட நால்வர் கைது செய்யப்பட்டனர்.

ரேண்டி மெகீன், ஷெரி ஸ்டில்வெல், கோடி தூலியர் மற்றும் டேவிட் கிரதர்ஸ் ஆகிய சந்தேக நபர்கள் இந்த சம்பவத்தின் அடிப்படையில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த நால்வருக்கும் "போதைப்பொருள் கடத்தல் நோக்கில் வைத்திருத்தல்" மற்றும் "குற்ற வருவாய் வைத்திருத்தல்" ஆகிய 8 குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன என தெரிவிக்கப்படுகின்றது.




# பியர்சன் விமான நிலையத்தில் துப்பாக்கிச் சூடு; ஒருவர் பலி!

கனடாவின் விமான நிலையத்தில் துப்பாக்கி சூட்டு சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.

டொரோண்டோவின் பியர்சன் விமான நிலையத்திலே இந்த சம்பவம் இடம்பெற்றிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சம்பவத்தில் 30 வயதுடைய நபர் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்.

இந்த துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் பொலிஸார் தொடர்புபட்டிருப்பதாக விமான நிலைய வட்டாரத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

விமான நிலையத்தின் புறப்பாடு முனையத்தில் இந்த சம்பவம் பதிவாகியுள்ளது.

இந்த சம்பவத்தினால் பொதுமக்களுக்கு எவ்வித பாதிப்பும் கிடையாது எனவும் மக்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தைத் தொடர்ந்து விமான நிலையத்தினை அண்டிய சில வீதிகள் மூடப்பட்டுள்ளன.

இரண்டு அல்லது மூன்று பேருக்கு இடையிலான மோதல் சம்பவமொன்று தொடர்பில் பொலிஸாருக்கு தகவல் கிடைக்கப் பெற்றதாகவும் அதன் அடிப்படையில் பொலிஸார் சம்பவ இடத்திற்கு விரைந்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மோதலை தடுக்க பொலிஸார் முயற்சித்த போது ஒருவர் துப்பாக்கியை பயன்படுத்த முயற்சித்தார் எனவும் இதன் போது பொலிஸார் மேற்படி நபர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது.

# மதுபான திருட்டில் ஈடுபட்டவர் மீது 100 இற்கும் மேற்பட்ட குற்றச்சாட்டுகள்



கனடாவின் டொரொண்டோ நகரில் உள்ள பல மதுபான விற்பனை நிறுவனம் ஒன்றின் கடைகளில் கடந்த ஒரு ஆண்டாக தொடர்ச்சியாக நிகழ்ந்த மது திருட்டு சம்பவங்கள் தொடர்பில் 42 வயதுடைய நபர் மீது 100 இற்கும் மேற்பட்ட குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

டொரொண்டோ பொலிஸார் கடந்த புதன்கிழமை வெளியிட்ட செய்திக்குறிப்பில், இந்த திருட்டுகள் 2024 ஏப்ரல் 13 முதல் 2025 ஏப்ரல் 11 வரை நடைபெற்றுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சந்தேகநபர் பெரிய அளவில் மது பானங்களை திருடி சென்றுள்ளார் எனவும் மொத்தமாக சுமார் 30,000 டொலர் மதிப்புள்ள மதுபானங்கள் திருடப்பட்டன எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சத்வீர் சிங் தூர் என்பவருக்கு எதிராகவே இவ்வாறு 100 இற்கும் மேற்பட்ட குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன.